முழுப் பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2025

# 23 - அரசியல் விஞ்ஞானம்

## புள்ளியிடும் திட்டம்

AL/23/T/89

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

**வினாப்பத்திரம் I**

A மற்றும் B ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது.

நேரம்: 02 மணித்தியாலங்கள்

**வினாப்பத்திரம் I இன் A பகுதி**

தெரிவு 05 இனைக் கொண்ட பல்தேர்வு வினாக்கள் 30 ஆகும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகளாகும்.

**வினாப்பத்திரம் I இன் B பகுதி**

குறுவிடை வழங்கத்தக்க 20 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.
ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 40 புள்ளிகளாகும்.

*** வினாப்பத்திரம் I இன் A பகுதியினதும் B பகுதியினதும் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.**

**வினாப்பத்திரம் II**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

இது **I, II, III** என மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி I இல் இருந்து குறைந்தது ஒரு வினாவினையும், **II** இல் இருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களையும், பகுதி **III** இல் இருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் உள்ளடக்கி **05** வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

பகுதி I - கட்டுரை மற்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் 03 காணப்படும்.

பகுதி II - கட்டுரை மற்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் 04 காணப்படும்.

பகுதி III- கட்டுரை மற்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் 03 காணப்படும்

வினாப்பத்திரம் **II** இற்கான மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

இறுதிப் புள்ளிகளைக் கணித்தல்

வினாப்பத்திரம் I = 100

வினாப்பத்திரம் II = 100

இறுதிப் புள்ளிகள் $= \frac{200}{2} = 100$



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல் :

இப் புள்ளியிடும் திட்டத்தினுள் **க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2025** நடைபெற்ற பரீட்சைக்கான இல. 23 அரசியல் விஞ்ஞானப்பாடத்திற்கு அமைவாக முதலாம் மற்றும் இரண்டாம் வினாத்தாள்களில் அடங்கும் வினாக்களுக்கான கட்டுப்பாட்டு பரிசோதனை சபையினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விடைத் தொகுதிகளே உள்ளடங்கியுள்ளன. இவ்விடைகள் உதவி பரிசோதகர்களுக்கு விடைகளை மதிப்பிடுவதற்கான ஒரு வழிகாட்டி மட்டுமே ஆகும்.

வினாத்தாள் **II** இற்கான விடைகளில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான அடிப்படை விடயங்கள் மாத்திரமே உள்ளடங்கியுள்ளது. இவ் விடயங்களுக்கு மேலதிகமாக பரீட்சார்த்திகள் மேலதிக விடயங்களை முன் வைத்திருப்பின் அதன் பொருத்தப்பாடடினை கவனத்திற் கொண்டு அதற்கான புள்ளிகளை வழங்க பரிசோதகர் நடவடிக்கை எடுக்க வேண்டும். விடைகளுக்கான புள்ளிகளை வழங்கும்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து பரிசோதகர் விசேட அவதானத்தினைச் செலுத்த வேண்டும்.

(அ). வினாவினை சரியாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளதா? அறிமுகம் மற்றும் ஆரம்பித்தல் என்பவற்றின் மூலம் அதனை விளங்கிக் கொள்ள முடியும்.

(ஆ). வினாக்களுக்கு உரிய விடயங்களை சரியாகத் தெரிவு செய்துள்ளனரா? மற்றும் அவ்விடயங்களை சரியான முறையில் ஒழுங்கமைத்து முன்வைத்துள்ளனரா? என்பது தொடர்பாகவும்

(இ). விடயங்களை போதுமானளவு பகுப்பாய்வு செய்துள்ளனரா? என்பது பற்றியும்

(ஈ). இறுதி முடிவுக்கு வந்துள்ளனரா? மற்றும் இந்த இறுதி முடிவின் தர்க்கமுறை பொருத்தமுடையதா? என்பது பற்றியும்

பரீட்சார்த்திகள் விடையினுள் முன்வைக்கின்ற விடயங்கள் தொடர்பில் பிரச்சினைக்குரிய நிலைமை ஒன்று காணப்படுமாயின் அது தொடர்பில் பிரதான பரீட்சகரின் கவனத்திற்குக் கொண்டுவந்து தீர்மானம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டும்.

## வினாப்பத்திரம் - I

ஒட்டுமொத்த பாடத்திட்டமும் வினாத்தாளில் உள்ளடங்கும் வகையில் A, B என இரு பிரிவுகளைக் கொண்டது. A பகுதியில் 5 தெரிவுகளைக் கொண்டது.

B பகுதி குறு விடைகள் 02 வீதம் எதிர்பார்க்கப்படும் 20 வினாக்களைக் கொண்டது.

ஒட்டுமொத்த பாடத்திட்டம் தொடர்பில் பரீட்சார்த்தியின் விடய ரீதியான தெரிவினை பரிசோதிப்பது இப்பிரிவின் நோக்கமாகும்.

## வினாப்பத்திரம் - II

மூன்று பகுதிகளையும் 10 வினாக்களையும் கொண்டது.

பகுதி I - கட்டுரை மற்றும் அரைக் கட்டமைப்பு வகை வினாக்கள் 03 காணப்படும்.

பகுதி II - கட்டுரை மற்றும் அரைக் கட்டமைப்பு வகை வினாக்கள் 04 காணப்படும்.

பகுதி III - கட்டுரை மற்றும் அரை கட்டமைப்ப வகை வினாக்கள் 03 காணப்படும்.

பகுதி **I** அரசியல் விஞ்ஞான பாடத்தினுள் உள்ளடங்கியுள்ள கோட்பாடுகள் மற்றும் அவற்றின் நடைமுறைப் பயன்பாடுகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு, தெளிவினை பரிசோதிப்பதே வினாப்பத்திரத்தின் இப்பகுதியின் நோக்கமாகும். இதன்படி சில வினாக்களின் மூலம் கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருக்கள் தொடர்பாக நேரடியாக பரீட்சார்த்தியின் அறிவனை பரிசோதிப்பதோடு மேலும் சில வினாக்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட நாடுகள் சிலவற்றின் ஊடாக கோட்பாடு மற்றும் நடைமுறை என்பவற்றிற்கிடையில் காணப்படும் தொடர்புகள் பற்றிய பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் தெளிவு என்பன பரிசோதிக்கப்படும்.

பகுதி **II** இன் நோக்கம் யாதெனில் இலங்கையில் பிரித்தானியர் காலனித்துவ காலத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல், பொருளாதார மற்றம் சமூக மறுசீரமைப்பபுக்களின் தாக்கங்கள் மற்றம் அதன் பெறுபேறுகள் தொடர்பாக சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்தில் இலங்கையின் அரசியல் மற்றும் அரசியலமைப்பு வளர்ச்சிகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் தெளிவினைப் பரிசோதிப்பதாகும்.

பகுதி **III** இன் நோக்கம் யாதெனில் ஒப்பீட்டு அரசியலமைப்பு, சர்வதேச அரசியலின் புதிய அசைவியக்க தளத்தில் இலங்கையின் வெளிநாட்டு கொள்கை தொடர்பாகவும், ஒட்டுமொத்த பாடத்திட்டத்தோடு தொடர்புடைய தனித் தலைப்புக்கள் சில தொடர்பில் பரீட்சார்த்தியிடம் காணப்படும் அறிவு மற்றும் தெளிவினை பரிசோதிப்பதாகும்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**பகுதி II இற்கான அறிவுறுத்தல்கள்**

இவ்வினாக்கள் மொத்தமாக 20 புள்ளிகளைக் கொண்டவை. புள்ளிகளை வழங்குகையில் பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றவும்.

(i) அறிமுகம் / விடைக்கான பிரவேசம் - உயர்ந்தபட்சம் 02 புள்ளிகள்
(ii) முக்கிய விடயங்கள் / கருத்துக்கள், கலந்துரையாடல் - உயர்ந்தபட்சம் 16 புள்ளிகள்
(iii) முடிவுரை - உயர்ந்தபட்சம் 02 புள்ளிகள்

மேற்கூறப்பட்டவாறு புள்ளிகளை வழங்குவதுடன் பின்வரும் வழிகாட்டற் குறிப்புக்களையும் கருத்திற் கொள்ளவும்.

(அ) **அறிமுகம் விடைக்கான பிரவேசம்:** ஒரு அல்லது இரண்டு பந்திகளில் அமையலாம். எவ்வாறாயினும் வினாவை வேறுவடிவத்தில் மீளஎழுதுவதாக அமையக்கூடாது. விடையின் உள்ளடக்கத்தை அறிமுகம் செய்வதாக அமைந்திருத்தல் வேண்டும். புள்ளிவழங்கும்போது தரப்பட்டுள்ள விடைக்குப் பொருத்தமான விடயங்கள் அறிமுகத்தில் எழுதப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்து புள்ளி வழங்கவும். பலவீனமானதோர்/ பொருத்தமற்றதோர் அறிமுகத்திற்கு புள்ளிகள் வழங்குவதா இல்லையா என்பதைப் பரீட்சகர்கள் தீர்மானிக்கமுடியும். நல்ல, தரமான, போதியளவு, கருத்துக்களைக் கொண்டுள்ள அறிமுகம் / விடைக்கான பிரவேசம் ஆகியவற்றைக் கொண்ட விடைக்கே முழுமையான புள்ளிகளை வழங்க முடியும்.

(ஆ) **கலந்துரையாடல்:** ஒவ்வொரு விடைக்கான முக்கிய விடயங்கள்/ கருத்துக்களை புள்ளிவழங்கும் திட்டம் வழங்குகின்றது. பரீட்சகர்கள் புள்ளிவழங்கும் திட்டத்திலுள்ள விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா, போதியளவு விவரிக்கப்பட்டுள்ளதா என்பதனை புள்ளி வழங்கும்போது சரிபார்த்தல் வேண்டும். வெறுமனே கருத்துக்களை மட்டும் (Points) குறிப்பிடுவது ஒருநல்ல விடையாகாது. பரீட்சார்த்திகள் தமது கலந்துரையாடலில் சுயாதீன அறிவினை மற்றும் அரசியல் விஞ்ஞான பாடத்துடன் தொடர்புடைய புதிய தகவல்களை முன்வைத்திருப்பார்களாயின் அதற்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

(இ) முடிவுரை: இது வினாவை மீள எழுதுவதன்று. ஒரு சிறந்த முடிவுரை பின்வரும் விடயங்களைக் கொண்டமைதல் வேண்டும்.

01 விடையில் வழங்கப்பட்டுள்ள விடயங்களின் சரியான சுருக்கம் ஒன்றினை முன்வைத்தல்

02 வழங்கப்பட்டுள்ள விடையின் பகுப்பாய்வு சுருக்கம் ஒன்றினை முன்வைத்தல்

03 பரீட்சார்த்தி விடையில் முன்வைத்துள்ள பிரதான வாதங்கள் இவ்வினா பற்றிய பரீட்சார்த்தியின் சுய அவதானிப்பு/ பகுப்பாய்வு வாதம் ஆகியவற்றை முன்வைக்கலாம்.

04. முடிவுரை ஒன்று அல்லது இரண்டு பந்திகளில் அமையலாம்.

சிலநேரங்களில் பரீட்சார்த்திகள் முடிவுரை என குறிப்பிடாமல் தமது விடையினை நிறைவு செய்திருக்க முடியும். இது குறித்து பரீட்சகர்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

## பகுதியளவிலான கட்டமைப்பு வினாக்கள்

இவ் வினாப்பத்திரத்தில் நான்கு பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் உள்ளன. பரீட்சார்த்திகள் வழங்கப்பட்டுள்ள பல தெரிவுகளில் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்

பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட விடைகளை மதிப்பிடுகையில் பின்வரும் வழிகாட்டலைப் பின்பற்றவும்.

i. பரீட்சார்த்திகள் ஒவ்வொரு தலைப்புக்கும் நீண்ட விடையை எழுதவேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை. பொதுவாக சுருக்கமான விடையாக இருத்தல் வேண்டும். அதேவேளை தலைப்பின் அனைத்து பிரதான விடயங்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

ii. பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட வினாவுக்கான விடை கட்டுரைவினாவினைப் போன்று பின்வரும் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அவையாவன

   (i) அறிமுகம் விடைக்கான பிரவேசம் - உயர்ந்தபட்சம் 01 புள்ளி

   (ii) தரவுகளை கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட விவரிப்பு: உயர்ந்தபட்சம் 08புள்ளிகள். கலந்துரையாடலுக்கு புள்ளி வழங்கும்போது விடையின் தரம், குறிப்பாக பாடம் தொடர்பான ஆழமானஅறிவு, சுயாதீனஅறிவு, விவரண மற்றும் பகுப்பாய்வுதிறன்கள், மொழிநடை மற்றும் முன்வைக்கும் திறன் என்பவற்றினைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

   (iii) முடிவுரை – உயர்ந்தபட்சம் 01 புள்ளி

குறிப்பு : சில பரீட்சார்த்திகள் கட்டுரைவகை மற்றும் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கையில் அறிமுகம்/ விடைக்கான பிரவேசம், முடிவுரை ஆகியவற்றை வெளிப்படையாகக் குறிப்பிடாது எழுதியிருக்கலாம். தயவுசெய்து அவை பற்றிக் கருத்திற் கொண்டு உரிய புள்ளிகளை வழங்கவும்



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................................... ✓ $\frac{4}{5}$
.....................................................................
.....................................................................

(ii) ..................................................................... ✓ $\frac{3}{5}$
.....................................................................
.....................................................................

(iii) ..................................................................... ✓ $\frac{3}{5}$
.....................................................................
.....................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாவுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I இற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

| | | |
|---|---|---|
| දේශපාලන විද්‍යාව I<br>அரசியல் விஞ்ஞானம் I<br>Political Science I | 23 T I | පැය දෙකයි<br>*இரண்டு மணித்தியாலம்*<br>*Two hours* |

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வினாத்தாள் **A, B** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி **A** பல்தேர்வு வினாக்கள் **30** இனையும் பகுதி **B** குறு வினாக்கள் **20** இனையும் கொண்டுள்ளன.
- சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 1 - 3 | |
| 2 | 4 - 10 | |
| 3 | 11 - 16 | |
| 4 | 17 - 23 | |
| 5 | 24 - 30 | |
| 6 | 31 - 38 | |
| 7 | 39 - 46 | |
| 8 | 47 - 50 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி A

- **1** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான** அல்லது **மிகவும் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**1.** நாம் ஏன் அரசியல் விஞ்ஞானத்தைக் கற்க வேண்டும்?
(1) அரசியல் முறைமைகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை விளங்கிக்கொள்வதற்காகும்.
(2) சமூகப் பிரச்சினைகளின் தன்மையினை அறிந்துக் கொள்வதற்காகும்.
(3) மனித நடத்தைகளை அறிந்துக் கொள்வதற்காகும்.
(4) அரசு மற்றும் அரசாங்கத்தின் ஆன்மீக அடிப்படைகளை அடையாளம் காண்பதற்காகும்.
(5) சமூக ஒழுங்கமைப்புகளின் செயற்பாடுகளை விளங்கிக் கொள்வதற்காகும். (……)

**2.** பின்வருவனவற்றுள் அரசியல் விஞ்ஞானத்துடன் நெருங்கிய தொடர்புடைய பாடங்களின் தொகுதி யாது?
(1) பொருளியல், சமூகவியல், வரலாறு, புவியியல் மற்றும் பௌதிகவியல்
(2) மானிடவியல், சட்டம், பொருளியல், வரலாறு மற்றும் இரசாயனவியல்
(3) பொருளியல், சமூகவியல், புவியியல், சட்டம் மற்றும் வரலாறு
(4) மெய்யியல், பொருளியல், மானிடவியல், சமூகவியல் மற்றும் வானியல்
(5) சட்டம், பொருளியல், உளவியல், வரலாறு மற்றும் நிலவியல் (……)

**3.** அரசியல் விஞ்ஞானத்தில் ஒப்பீட்டு அணுகுமுறை, அடிப்படையில் கவனம் செலுத்துவது
(1) பல்வேறு அரசியல் முறைமைகள் மற்றும் அவற்றின் பணிகளை மதிப்பிடுவதிலாகும்.
(2) அரசியலில் உண்மையில் இருக்கும் விடயங்களை விட என்ன இருக்க வேண்டும் என்பது தொடர்பிலாகும்.
(3) சமூகத்தில் வாழும் மனிதர்களின் அரசியல் நடத்தைகளைக் கற்பதிலாகும்.
(4) பல்வேறு கலாசாரங்களை விளங்கிக்கொள்வதிலாகும்.
(5) அரசியலுக்கும் பொருளாதாரத்துக்கும் இடையிலான பரஸ்பர உறவிலாகும். (……)

**4.** பின்வருவனவற்றுள் அரசின் இயல்பினை மிகச் சரியாக விளக்கும் கூற்று எது?
(1) புவியியல் ரீதியாக வரையறுக்கப்பட்ட எல்லைகள் இல்லாத ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும்.
(2) தன்னார்வ உறுப்புரிமையினைக் கொண்ட ஓர் ஒழுங்கமைப்பாகும்.
(3) பாதுகாப்பு மற்றும் பொருளாதார நன்மைகளுக்காக உருவாக்கப்பட்ட ஒரு தற்காலிக நிறுவனமாகும்.
(4) இறைமை அதிகாரத்தின் ஒரே ஒரு உரிமையாளர் ஆகும்.
(5) அரசாங்கத்தின் ஒரு கருவியாகும். (..4..)

**5.** பின்வரும் அரசியல் கருத்தியல்களில் எது சமூக சமத்துவம் மற்றும் உற்பத்தி வழிமுறைகளின் பொது உடைமை (common ownership of the means of production) போன்ற தத்துவங்களை வலியுறுத்துகின்றது?
(1) தாராண்மைவாதம் (2) சோசலிசம் (3) பாசிசம்
(4) சமூக ஜனநாயகம் (5) தேசியவாதம் (..2..)

**6.** பின்வருவனவற்றுள் தாராள ஜனநாயக அரசாங்கமொன்றின் முக்கியப் பண்பினை சரியாகப் பிரதிபலிக்கும் கூற்று எது?
(1) அரசாங்கம் அரசியலமைப்பு வரம்புகளுக்கு (வரையறைகள்) உட்பட்டிருக்கும்.
(2) பொதுவாக அரசாங்கமொன்றினை மாற்றுவது கடினமான செயன்முறையாகும்.
(3) அரசாங்கத்தின் விருப்பத்திலேயே தனிநபர் சுதந்திரம் வழங்கப்படும்.
(4) ஆட்சியாளர்கள் சட்டத்திற்கு மேலானவர்களாகக் காணப்படுவர்.
(5) அரசாங்கம் எப்பொழுதும் உயர் குழாம் வகுப்பினரின் நலன்களை முன்னிலைப்படுத்திச் செயற்படும். (..1..)

**7.** பிரதிநிதித்துவ ஜனநாயக அரசாங்க முறையொன்றில்,
(1) தொழில்முறை (தொழில்சார்) அரசியல்வாதிகள் என்ற தனியான வகுப்பினர் காணப்படுவதில்லை.
(2) எல்லா அரசியல் தீர்மானங்களும் மக்களால் மேற்கொள்ளப்படுகின்றன.
(3) அரசாங்கத்துக்கும் ஆளப்படுவோருக்கும் இடையிலான வேறுபாடு தெளிவாக இருப்பதில்லை.
(4) பிரஜைகள் அரசாங்கத்தின் சகல செயற்பாடுகளையும் மேற்கொள்ளக் கடமைப்பட்டிருப்பர்.
(5) மக்கள் தம் சார்பாக தீர்மானம் எடுப்பவர்களை ஆட்சியாளர்களாகத் தெரிவு செய்வர். (..5..)

**8.** பின்வருவனவற்றுள் சமஷ்டி அரசாங்க முறையொன்றின் பண்பு யாது?
(1) இறைமை அதிகாரம் அரசாங்கத்தின் இரு மட்டங்களில் பகிரப்பட்டிருத்தல்
(2) நாடு முழுவதும் ஒரே சீரான (ஒருமைப்படுத்தப்பட்ட) சட்ட மற்றும் நிர்வாக முறைமை பேணப்படுதல்
(3) உள்ளூராட்சி அரசாங்கங்கள் தமது அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளல்
(4) தேசிய சட்டத்துறை தமது தற்றுணிபு அதிகாரத்தினைப் பயன்படுத்தி எந்த ஒரு சட்டத்தினையும் உருவாக்க கூடிய இயலுமையினைக் கொண்டிருத்தல்
(5) சகல சட்டவாக்கம் தொடர்பான ஏகபோக உரிமை மத்திய அரசாங்கத்திடம் காணப்படல் (..1..)

**9.** அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டுடன் ஒத்து நிற்கும் கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) நவீன அரசுகளில் முழுமையான அதிகாரப் பிரிவினை சாத்தியமாகும்.
(2) நீதித்துறையானது சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டு சுதந்திரமாகச் செயற்பட வேண்டும்.
(3) அதிகாரப் பிரிவினை என்பது ஜனநாயக அரசாங்கத்தின் ஓர் அவசியமான பண்பு அல்ல.
(4) அதிகாரப் பிரிவினை தொடர்பான தத்துவங்களை தோமஸ் ஹொப்ஸின் எழுத்தாக்கங்களில் காணமுடியும்.
(5) அதிகாரப் பிரிவினைக் கோட்பாடானது பாராளுமன்ற அரசாங்க முறைகளில் இறுக்கமாகப் பிரயோகிக்கப்படுகின்றது. (..2..)

**10.** பாராளுமன்ற அரசாங்க முறையொன்றில்,
(1) பிரதமர் பதவியின் தவணைக் காலம் வரையறுக்கப்பட்டிருக்கும்.
(2) பிரதமர் அரசாங்கத்தின் தலைவராகவும் அரசின் தலைவராகவும் செயற்படுவார்.
(3) அமைச்சரவைக்கும் சட்டத்துறைக்கும் இடையிலான தொடர்பு தெளிவாக வரையறுக்கப்பட்டிருப்பதில்லை.
(4) அரசாங்கம் சட்டத்துறையில் இருந்து உருவாகின்றது.
(5) அரசியல் நிறைவேற்றுத்துறையானது அரசியலமைப்பு ரீதியாக சட்டத்துறைக்குப் பொறுப்புக் கூறுவதில்லை. (..4..)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**11.** பின்வருவனவற்றுள் சரியான விளக்கத்துடன் கூடிய எண்ணக்கருவினை தெரிவுசெய்க.

(1) பிரஜை - ஓர் அரசின் முழுமையான உறுப்புரிமைக்குரிய உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை அனுபவிப்பதற்கான உரித்துடமையினைக் கொண்ட அரசொன்றின் முழுமையான உறுப்பினராவார்.
(2) நடத்தைவாதம் - சமூக மற்றும் அரசியல் நிறுவனங்களின் தொழிற்பாடுகளைக் கற்பதற்கான ஓர் அணுகுமுறையாகும்.
(3) இறைமை - தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கொண்டுள்ள மேலான அதிகாரமாகும்.
(4) இயற்கை உரிமைகள் - ஆட்சியாளர்களால் மனிதர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளாகும்.
(5) சட்டத்தின் ஆட்சி - ஆட்சியாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப சட்டங்களை மாற்றுகின்ற ஒரு முறையாகும். (..1...)

**12.** சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் படி, அரசு என்பது

(1) சிவில் சமூகத்திற்கு இரண்டாம் பட்சமானதாகும்.
(2) வரலாற்று ரீதியான பரிணாம வளர்ச்சியின் ஒரு விளைவாகும்.
(3) மக்களுக்கிடையிலான ஓர் ஒப்பந்தத்தின் விளைவாகும்.
(4) கடவுளின் ஒரு படைப்பாகும்.
(5) மக்களின் பொது நலன்களை நிறைவேற்றும் எதிர்பார்ப்பு இல்லாத நிறுவனமாகும். (..3...)

**13.** பின்வரும் சோடிகளில் சிந்தனையாளர் மற்றும் அவரின் அரசியல் சிந்தனையுடன் சரியாகப் பொருந்துகின்ற கூற்று எது?

(1) அரிஸ்டோட்டில் : "மனிதன் இயல்பிலேயே ஓர் அரசியல் பிராணியாவான்."
(2) ஏ. வீ. டைசி : "அதிகாரம் ஊழல் செய்யும், தனிமுதன்மை அதிகாரம் முழு அளவில் ஊழல் செய்யும்."
(3) ஜோன் லொக் : "அராஜகம் மற்றும் சட்ட சீர்குலைவு என்பவற்றுக்கான ஒரேயொரு மாற்றுவழி தனிமுதன்மை அதிகாரத்தினைக் கொண்ட அரசாங்கமாகும்."
(4) ஜீன் போடின் : "பிரஜைகள் இயற்கை உரிமைகளான உயிர் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரத்திற்கான உரிமை மற்றும் சொத்துரிமையினைக் கொண்டுள்ளனர்."
(5) மொண்டஸ்கியூ : "சட்டங்களின் ஆட்சி இருக்கவேண்டுமே தவிர மனிதர்களின் ஆட்சி அல்ல." (..1...)

**14.** பின்வரும் ஐந்து நாடுகளின் அரசியலமைப்புடன் தொடர்புடைய கூற்றுகளில் எது சரியானது?

(1) சுவிட்சர்லாந்து அரைகுறை சமஷ்டி பண்புகளைக் கொண்ட ஒரு சமஷ்டி அரசாகும்.
(2) இந்திய அரசியலமைப்பு முழுமையாக மரபார்ந்த (தூய) சமஷ்டித் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.
(3) ஐக்கிய அமெரிக்காவின் அரசியலமைப்பு நெகிழும் தன்மையைக் கொண்டதுடன் அதனை இலகுவில் மாற்றவும் முடியும்.
(4) மரபுகள் மற்றும் சம்பிரதாயங்கள் பிரித்தானிய அரசியலமைப்பின் எழுதப்பட்ட முக்கிய அம்சங்களாக காணப்படுகின்றன.
(5) தற்போதைய பிரான்சிய அரசியலமைப்பில் பிரான்ஸ் ஓர் ஒற்றையாட்சி அரசு என எங்கும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. (..5...)

**15.** பின்வருவனவற்றுள் பொதுக் கொள்கையின் பண்பு யாது?

(1) அது அரசியல் கட்சிகளினால் மாத்திரம் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது.
(2) அது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் எழுமாறான தீர்மானங்களின் தொகுதியாகும்.
(3) அது சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்படுகின்றது.
(4) அது வணிக ஒழுங்கமைப்புகளுக்கு மாத்திரமே உரியது.
(5) அது எப்பொழுதும் தனியார் நலன்களை ஊக்குவிக்கின்றது. (..3...)

**16.** பின்வரும் கூற்றுகளில் எது மோதல் முகாமைத்துவம் என்ற எண்ணக்கருவினை மிகச் சரியாக விபரிக்கின்றது?

(1) மோதலைத் தீர்ப்பதற்கு முயற்சிக்கின்றது.
(2) மோதலில் ஈடுபடும் தரப்பினர்களுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் விட்டுக்கொடுப்பினை ஊக்குவிப்பதில்லை.
(3) மோதலுக்கான மூல காரணங்களை மறுதளிக்கின்றது.
(4) மோதலின் எதிர்மறையான பாதிப்புகளைக் குறைப்பதில் கவனம் செலுத்துகின்றது.
(5) எப்பொழுதும் ஒரு தரப்பினரின் நலன்களை மாத்திரமே ஊக்குவிக்கின்றது. (..4...)

**17.** பின்வருவனவற்றுள் தேசிய அதிகாரத்தின் கூறுகளில் ஒன்றாகக் கருதப்படுவது எது?
(1) சர்வதேச ஒழுக்கம் (2) சுற்றுச் சூழல் (3) சிவில் சமூகம்
(4) இராணுவம் (5) பொதுசன அபிப்பிராயம் (...4...)

**18.** பின்வருவனவற்றுள் பிரித்தானிய பாராளுமன்றம் தொடர்பான சரியான கூற்று எது?
(1) பாராளுமன்றம் சட்டவாக்கச் செயற்பாடுகள் தொடர்பாக முடிக்கு பொறுப்புக்கூற வேண்டும்.
(2) பாராளுமன்றம் சட்ட ரீதியாக மீயுயர்த்தன்மைக் கொண்ட நிறுவனமாகும்.
(3) முடி இன்னும் பாராளுமன்றத்தின் ஒரு அங்கமாகக் காணப்படுவதில்லை.
(4) பொது மக்கள் சபையின் உறுப்பினர்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் ஊடாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.
(5) சட்டவாக்கம் தொடர்பான விடயங்களில் இரு சபைகளுக்கும் சமமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (..2..)

**19.** பின்வருவனவற்றுள் இலங்கையின் எந்த அரசாங்கம் அணிசேரா இயக்கத்துடன் நற்புறவான தொடர்பினைப் பேணியது?
(1) டி.எஸ். சேனாநாயக்கவின் அரசாங்கம் (1947 - 1952)
(2) சேர் ஜோன் கொத்தலாவலவின் அரசாங்கம் (1953 - 1956)
(3) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கம் (1970 - 1977)
(4) ஜே.ஆர். ஜெயவர்தனவின் அரசாங்கம் (1977 - 1989)
(5) ரனசிங்க பிரேமதாசவின் அரசாங்கம் (1989 - 1993) (...3...)

**20.** பல்தேசிய கம்பனிகள் (Multi-National Corporations) என்பவை
(1) உலகலாவிய ரீதியில் வர்த்தக மற்றும் வணிகச் செயற்பாடுகளில் பிரதானமாக ஈடுப்பட்டுள்ள பலம்வாய்ந்த கூட்டுத்தாபனங்கள் ஆகும்.
(2) உலகலாவிய ரீதியில் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புக்கள் என அறியப்பட்டவையாகும்.
(3) காலநிலை மாற்றத்தினைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அமைப்புக்கள் ஆகும்.
(4) இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் எழுச்சிபெற்ற மிகவும் அதிகாரம்மிக்க பாதுகாப்பு முகாம் ஆகும்.
(5) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தேசத்தினைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் செயற்றிறனுடன் ஈடுபட்டுள்ள அமைப்புக்கள் ஆகும். (...1...)

● **21** தொடக்கம் **25** வரையிலான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் இருந்து **சரியான கூற்றுத் தொகுதியினைக்** கொண்ட விடையினைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**21.** இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில்
A - அரசாங்கத்தின் மக்கள் தளம் படிப்படியாக விரிவடைந்தது.
B - ஆங்கிலம் கற்ற மேலைத்தேய மத்தியதர வர்க்கமொன்று எழுச்சிப் பெற்றது.
C - சுயாதீனமான நீதி முறைமையொன்று வளர்ச்சியடைந்தது.
D - முழு நாட்டிற்கும் பொதுவான நிர்வாக முறையொன்று வளர்ச்சியடைந்தது.
E - பொருளாதார விடயங்களில் அரசாங்கம் தலையிட வேண்டும் எனும் கொள்கை இடைநிறுத்தப்பட்டது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (....1....)

**22.** டொனமூர் அரசியலமைப்பு நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் (1931 - 1947)
A - சமூக நலன் தொடர்பான செலவு கணிசமாக அதிகரித்தது.
B - குறிப்பிடத்தக்களவான சமூக நலன் மற்றும் கைத்தொழில் சார்ந்த சட்ட ஏற்பாடுகள் அறிமுகம் செய்யப்பட்டன.
C - இலங்கை அமைச்சர்கள் படிப்படியாக மிகவும் அதிகாரம்மிக்கவர்களாக மாறினர்.
D - அரசியல் கட்சி முறைமை வளர்ச்சியடைந்ததுடன் அது நன்கு ஸ்தாபிக்கப்பட்டது.
E - அரசாங்கத் திணைக்களங்களின் பணிகள் விஸ்தரிக்கப்பட்டன.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (...2...)

**23.** சோல்பரி ஆணைக்குழு
A - மக்கள் பிரதிநிதிகள் சபையினால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் மீது தடுப்பானை (வீடோ) அதிகாரத்தினைப் பிரயோகிக்கக்கூடிய இரண்டாம் மன்றம் ஒன்றினைத் தாபிக்க பரிந்துரை செய்தது.
B - பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரம் போன்ற பதவிகளைப் பிரதமர் வைத்திருக்க வேண்டும் என பரிந்துரை செய்தது.
C - மூன்று உறுப்பினர்களைக் கொண்ட பொதுச்சேவை ஆணைக்குழு ஒன்றினைப் பரிந்துரை செய்தது.
D - பல் அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளைப் பரிந்துரை செய்தது.
E - ஒரு நீதிச் சேவை ஆணைக்குழுவினைப் பரிந்துரை செய்தது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (...5...)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**24.** இலங்கையின் 1947/1948 ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பில் இருந்து வேறுபட்ட 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு கொண்டிருந்த முக்கியப் பண்புகளாவன

A - அரச கொள்கைத் தத்துவங்கள் உள்வாங்கப்பட்டமை
B - தேசிய அரசுப் பேரவையின் மீயுயர் தன்மையினை உறுதி செய்தமை
C - அரசியல் அமைப்பு நீதிமன்றம் ஒன்று தாபிக்கப்பட்டமை
D - அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை உள்வாங்கியமை
E - புதிய தேர்தல் முறையொன்றினை அறிமுகம் செய்தமை

(1) A B C D (2) A B C E (3) A B D E (4) A C D E (5) B C D E (…1…)

**25.** இலங்கையில் 1947 - 1972 வரையான காலப்பகுதியில்

A - பிரித்தானிய முடி அரசின் தலைவராகக் காணப்பட்டார்.
B - அரசியல் முறைமை வெஸ்ட்மின்ஸ்டர் அமைச்சரவை மாதிரியை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டது.
C - இரு பிரதான அரசியல் கட்சிகளாக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன காணப்பட்டன.
D - அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் ஒன்று காணப்படவில்லை.
E - அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

(1) A B C D (2) A B C E (3) A B D E (4) A C D E (5) B C D E (…1…)

- **26** தொடக்கம் **30** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து பின்வரும் இரு கூற்றுகளுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடையின் இலக்கத்தினைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விவரிக்கின்றது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று | |
|---|---|---|---|
| **26.** | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கான 14 ஆவது திருத்தம் தற்போதைய தேர்தல் முறைக்கு தேசியப் பட்டியல் முறையினை அறிமுகம் செய்தது. | ஒவ்வொரு அரசியல் கட்சியும் சுயேட்சைக் குழுவும் தேசிய ரீதியாகப் பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்தின் அடிப்படையில் 29 பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர். | (…5…) |
| **27.** | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மீது வரையறுக்கப்பட்ட தடைகள் மற்றும் சமன்பாடுகளை ஏற்படுத்தியது. | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தம் அரசியலமைப்புப் பேரவையினைத் தொடர்ந்து பேணியது. | (…2…) |
| **28.** | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி, சட்டமொன்றின் அரசியலமைப்புத் தன்மையினை அது சட்டமாக்கப்படுவதற்கு முன்னர் சவாலுக்குட்படுத்த முடியும். | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்டங்களை மீளாய்வு செய்யும் முழுமையான நீதிப்புனராய்வு அதிகாரத்தினை அறிமுகம் செய்யவில்லை. | (…1…) |
| **29.** | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழ், மாகாண ஆளுநர் மாகாண முதலமைச்சரால் நியமிக்கப்படுகின்றார். | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்திற்கிணங்க, மாகாண ஆளுநர் ஜனாதிபதியினை பிரதிநிதித்துவம் செய்கின்றார். | (…3…) |
| **30.** | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தம் இரண்டு வருடங்களின் பின்னர் பாராளுமன்றத்தினைக் கலைப்பதற்கான அதிகாரத்தினை ஜனாதிபதிக்கு வழங்கியது. | இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் படி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்ட மசோதாக்கல் ஜனாதிபதியின் இறுதி ஒப்புதல் கிடைக்கப்பெற்ற பின்னரே சட்டங்களாகின்றன. | (…4…) |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2025

විෂය අංකය - பாட இலக்கம்: **23** | විෂයය பாடம்: **அரசியல் விஞ்ஞானம்**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
### I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 1 | 21. | 1 |
| 02. | 3 | 12. | 3 | 22. | 2 |
| 03. | 1 | 13. | 1 | 23. | 5 |
| 04. | 4 | 14. | 5 | 24. | 1 |
| 05. | 2 | 15. | 3 | 25. | 1 |
| 06. | 1 | 16. | 4 | 26. | 5 |
| 07. | 5 | 17. | 4 | 27. | 2 |
| 08. | 1 | 18. | 2 | 28. | 1 |
| 09. | 2 | 19. | 3 | 29. | 3 |
| 10. | 4 | 20. | 1 | 30. | 4 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் $2 \times 30 = 60$



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி B

**31.** முன்னோடி கிரேக்க அரசியல் சிந்தனையாளர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**32.** பிரஜைகளின் **இரண்டு** முக்கிய அரசியல் கடமைகள் (பணிகளைக்) குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**33.** அரசியல் பொருளாதார அணுகுமுறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு வழங்கிய **இரண்டு** முன்னோடி சிந்தனையாளர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**34.** அரசு தொடர்பான தாராண்மைவாத அரசியல் கோட்பாட்டின் படி அரசின் பரிணாம வளர்ச்சியினை மூன்று வகைகளில் (கட்டங்கள்) அடையாளம் கண்டுக்கொள்ள முடியும். அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**35.** பெண்ணியவாதத்தின் பல வடிவங்கள் / துறைகள் காணப்படுகின்றன. அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**36.** ஒற்றையாட்சி அரசின் **இரண்டு** பிரதான பண்புகளைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**37.** (1) நீர் கற்றுள்ள ஐந்து நாடுகளின் அரசியலமைப்பு மாதிரிகளில், அர்த்த (கலப்பு) ஜனாதிபதி முறையினைக் கொண்ட நாடு எது?

..............................................................................................................

(2) நீர் கற்றுள்ள ஐந்து நாடுகளில் மிகவும் பலமான இரண்டாம் மன்றத்தினைக் கொண்டுள்ள நாட்டிற்கு உதாரணம் ஒன்றினைத் தருக.

..............................................................................................................

**38.** பிரான்ஸில் உப தேசிய அரசாங்கங்கள் மூன்று மட்டங்களில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**39.** மோதலின் தொழிற்பாடுகளை (செயற்பாடுகள்) விளங்கிக்கொள்வதற்கு இரண்டு அணுகுமுறைகள் காணப்படுகின்றன. அவற்றைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

**40.** சர்வதேச அரசியலின் **இரண்டு** பிரதான செயற்பாட்டாளர்களையும் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

**41.** இந்தியாவில் மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான சட்டவாக்க அதிகாரங்கள் வேறுபட்ட மூன்று பட்டியல்களின் கீழ் பகிரப்பட்டுள்ளன. அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

**42.** 1833 ஆம் ஆண்டு கோல்புரூக் அரசியலமைப்பு இலங்கையில் இரண்டு சபைகளைத் தாபித்தது. அவற்றினைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

**43.** குறு - மக்கலம் அரசியலமைப்புச் சீர்த்திருத்தத்தின் கீழ் படித்த இலங்கையரை சட்டசபைக்குத் தெரிவு செய்வதற்கான முதலாவது தேர்தல் 1912 ஆம் ஆண்டு இடம்பெற்றது. அதில் இரண்டு வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

**44.** டொனமூர் அரசியலமைப்பின் கீழ் அரசாங்கத்தின் இரண்டு பிரதான பணிகளை அரசுக் கழகம் மேற்கொண்டது. அப்பணிகள் யாவை?

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

**45.** 1947 ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற்றபோது நாட்டில் பல அரசியல் கட்சிகள் காணப்பட்டன. அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

**46.** (1) 1947/48 ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதா ஒன்று சட்டமாவதற்கு இறுதி ஒப்புதல் வழங்கியவர் யார்?

..............................................................................................................................

(2) 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட மசோதா ஒன்று சட்ட வடிவம் பெறுவதற்கான சான்றிதழுக்கு ஒப்புதல் வழங்கியவர் யார்?

..............................................................................................................................



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**47.** (1) இரண்டாம் குடியரசு அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட எந்தத் திருத்தத்தின் ஊடாக இலங்கைப் பிரஜைகளுக்கு தகவல் அறியும் உரிமை வழங்கப்பட்டது?

..........................................................................................

(2) இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட எந்தத் திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியின் பதவி தவணைக்காலம் தொடர்பான மட்டுப்பாடு நீக்கப்பட்டது?

..........................................................................................

**48.** இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ள பாராளுமன்ற அரசாங்க முறையின் **இரண்டு** முக்கிய பண்புகளைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**49.** இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருவதற்கு தற்போது உதவி வழங்கும் **இரண்டு** சர்வதேச நிதி நிறுவனங்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

**50.** நவீன உலகில், அரசுகள் தமது வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பிரதானமாக மூன்று உபாயங்களைக் கையாளுகின்றன. அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

* * *

## பகுதி - II

## பகுதி B

31) அரிஸ்டோட்டில்

பிளேட்டோ

32) அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுதல்/ அரசியல் பங்கேற்பு

வாக்களித்தல்

அரசியல் கட்சிகளை உருவாக்குதல்

அரசியல் கட்சிகளில் உறுப்பினராதல்

நாளாந்த அரசியல் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுதல்

33) அடம் ஸ்மித், டேவிட் ரிகாடோ, J.S. மில், தோமஸ் மல்துஸ்

34) பழமை தாராண்மைவாதம்/ பழம் தாராண்மைவாதம்

நவீன தாராண்மைவாதம்

நவ தாராண்மைவாதம்

~~தலையிடா அரசு~~

~~நலன்புரி அரசு~~

~~குறைந்தபட்ச அரசு~~

35) தீவிர பெண்ணியவாதம்

லிபரல் பெண்ணியவாதம்

சோசலிச பெண்ணியவாதம்

மாக்சிச பெண்ணியவாதம்

பின் நவீனத்துவ பெண்ணியவாதம்

பின் கட்டமைப்புவாத பெண்ணியவாதம்

பின் காலனித்துவ பெண்ணியவாதம்

கறுப்பின பெண்ணியவாதம்

36) தனியொரு நிறுவனத்திடம் அரசியல் அதிகாரம் காணப்படுதல் (சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை)

மத்திய அரசாங்கத்தின் மீயுயர்தன்மை

சட்ட மற்றும் நிருவாகத்தின் ஒருமைத்தன்மை

ஒற்றைக் குடியுரிமை

வினைத்திறன் மிக்க நிருவாகம்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அல்லது உப தேசிய அரசாங்கங்களுக்கும் அதிகாரத்தினை பரவலாக்குதல் மற்றும் பன்முகப்படுத்தல்



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

37) பிரான்ஸ்

ஐக்கிய அமெரிக்கா

38) பிராந்தியங்கள்

திணைக்களங்கள்

கொமியுன்ஸ்/கொம்யூன்கள்

39) நேர்க்கணிய /நேர்மறை அணுகுமுறை

எதிர்க்கணிய /எதிர்மறையான அணுகுமுறை

40) தேசிய அரசுகள்

அரசு, அரசு சாரா செயற்பாட்டாளர்கள்

41) மத்தியப் பட்டியல்

மாநிலப் பட்டியல்

ஒத்தியங்குப் பட்டியல் /பொதுப் பட்டியல்

42) சட்ட சபை

நிறைவேற்று சபை

~~சட்ட நிர்வாக சபை~~

~~சட்ட நிருபண சபை~~

43) சேர் மார்கஸ் பெர்னான்டோ

சேர் பொன் இராமநாதன்

44) சட்டத்துறை சார்ந்த பணிகள்

நிறைவேற்றுத்துறை சார்ந்த பணிகள்

அரசாங்கத்தின் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை நிறைவேற்றுதல்

45) லங்கா சமசமாஜ கட்சி (LSSP)

ஐக்கிய தேசிய கட்சி (UNP)

கம்யுனிசக் கட்சி (CP)

தொழிற் கட்சி

இலங்கை இந்தியக் காங்கிரஸ்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

பொல்செவிக் சமசமாஜக் கட்சி அல்லது பொல்செவிக் லெனினிசக் கட்சி

ஐக்கிய லங்கா காங்கிரஸ்

ஸ்வராஜ் கட்சி

46) மகாதேசாதிபதி / ஆளுநர் நாயகம் -
சபாநாயகர்

47) 19வது அரசியலமைப்பு திருத்தம்
18வது அரசியலமைப்பு திருத்தம்

48) அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் இருந்து தெரிவு செய்யப்படல்.
அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு கூட்டாக பொறுப்புக்கூறல் மற்றும் பதிலளித்தல்.
நம்பிக்கையில்லா பிரேரணை மூலம் பிரதமர் உட்பட அரசாங்கத்தினை பதவிநீக்கம் செய்தல்.
அமைச்சர்கள் பாராளுமன்றத்தின் நம்பிக்கையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
பிரதமர், பாராளுமன்றத்தின் ஒரு உறுப்பினராக இருப்பதுடன், பாராளுமன்றத்தில் அமைச்சரவையினை வழிநடத்தல்.
எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரதமர் உட்பட அமைச்சர்களிடம் கேள்விகளை எழுப்புவது மற்றும் அவர்களை பொறுப்புக் கூறச் செய்தல்

49) சர்வதேச நாணய நிதியம் (IMF)
உலக வங்கி , IBRD.
ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)

50) இராஜதந்திரம்
வெளிநாட்டு உதவி /
இராணுவ பலம் /இராணுவம்


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

* இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.
* பகுதி **I** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் பகுதி **II** இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையும் பகுதி **III** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. அரசியல் விஞ்ஞானத்தின் பின்வரும் உப துறைகளில் எவையேனும் **இரண்டு** பற்றிச் சுருக்கமாக ஆராய்க.
   (i) அரசியல் நிறுவனங்கள்
   (ii) அரசியல் கோட்பாடுகள்
   (iii) அரசியல் கருத்தியல்கள்
   (iv) ஒப்பீட்டு அரசியல்

   (10 × 2 = 20 புள்ளிகள்)

2. "நிச்சயிக்கப்பட்ட ஆள்புல எல்லைகளுக்குள் இறைமை அதிகாரத்தினைப் பிரயோகிக்கும் மிக உயர்ந்த அரசியல் நிறுவனமே அரசாகும்." ஆராய்க. (20 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** அரசாங்க முறைகளின் பிரதான பண்புகளை ஆராய்க.
   (i) ஜனாதிபதித்துவ அரசாங்க முறை
   (ii) பாராளுமன்ற அரசாங்க முறை
   (iii) அர்த்த (கலப்பு) ஜனாதிபதித்துவ அரசாங்க முறை

   (10 × 2 = 20 புள்ளிகள்)

## பகுதி II

4. கோல்புறுக் - கமரன் சீர்த்திருத்தத்துடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** ஆராய்க.
   (i) ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை
   (ii) சுயாதீன நீதித்துறை ஒன்றுக்கான அடித்தளம் இடப்பட்டமை
   (iii) நிர்வாக முறைமையினை மத்தியமயப்படுத்தியமை (ஒருமுகப்படுத்தியமை)

   (10 × 2 = 20 புள்ளிகள்)

5. (i) டொனமூர் அரசியலமைப்பின் ஊடாக நிறைவேற்றுக்குழு முறை ஏன் அறிமுகம் செய்யப்பட்டது? (05 புள்ளிகள்)

(ii) நிறைவேற்றுக்குழு முறையின் செயற்பாடுகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் யாவை? (15 புள்ளிகள்)

6. இலங்கையின் 1947/48 சோல்பரி அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவையுடன் ஒப்பிடுக. (20 புள்ளிகள்)

7. (i) இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் உயர் நீதிமன்றம் கொண்டுள்ள நியாயாதிக்கங்களில் (அதிகாரங்கள்) எவையேனும் **ஐந்தினைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) 'இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு நீதித்துறைச் சுதந்திரத்தினைப் போதியளவு உறுதி செய்துள்ளது.' இக்கூற்றினை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்க. (15 புள்ளிகள்)

## பகுதி III

8. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைச்** சுருக்கமாக ஆராய்க.

(i) ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பின் முக்கியப் பண்புகள்

(ii) பிரித்தானிய ஒற்றையாட்சி அரசாங்க முறையின் மாறிவரும் தன்மை

(iii) சுவிட்சர்லாந்தின் கன்டன்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுயாட்சி நிர்வாக அதிகாரங்கள்

(10 × 2 = 20 புள்ளிகள்)

9. உலகின் புதிய அரசியல் மற்றும் பொருளாதாரப் போக்குகள் இலங்கையின் மீது ஏற்படுத்தும் தாக்கங்களை ஆராய்க. (20 புள்ளிகள்)

10. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டுக்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) கொள்கை உருவாக்கச் செயன்முறையில் அரசியல் கட்சிகளின் வகிபங்கு

(ii) சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் என்ற எண்ணக்கரு

(iii) உலக சமாதானத்தை உறுதிப்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபையின் வகிபங்கு

(iv) மதச்சார்பின்மைவாதம்

(v) இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதித்துவ முறையின் ஜனநாயகத்திற்கு எதிரான பண்புகள்

(10 × 2 = 20 புள்ளிகள்)

* * *



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி I

01. அரசியல் விஞ்ஞானத்தின் பின்வரும் உபதுறைகளில் எவையேனும் இரண்டு பற்றிச் சுருக்கமாக ஆராய்க.

i. அரசியல் நிறுவனங்கள்
ii. அரசியல் கோட்பாடுகள்
iii. அரசியல் கருத்தியல்கள்
iv. ஒப்பீட்டு அரசியல்

(10×2= 20 புள்ளிகள்)

### i. அரசியல் நிறுவனங்கள்

- அரசியல் நிறுவனங்கள் அரசியல் விஞ்ஞானத்தின் முக்கிய உப துறையாக காணப்படுவதுடன், அரசியல் அதிகாரத்தின் பிரயோகம் மற்றும் கூட்டுத் தீர்மானம் எடுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய கட்டமைப்புகள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுங்கமைப்புக்களை கற்பதற்கு உதவுகின்றன.
- இவ் உப துறையானது அரசியல் நிறுவனங்கள் எவ்வாறு அரசியல் நடத்தையினை செம்மைப்படுத்துகின்றன, தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன, மற்றும் அரசியல் முறைமையின் ஒழுங்கினை பேணுவதில் எவ்வாறு அதிகம் அக்கறை செலுத்துகிறது என்பதை அறிய உதவுகிறது.
- அரசியல் நிறுவனங்களை அவற்றின் தன்மை மற்றும் செயற்பாடுகளின் அடிப்படையில் முறைசார் மற்றும் முறைசாரா நிறுவனங்கள் என வகைப்படுத்த முடியும்.
- முறையான அரசியல் நிறுவனங்களானவை அரசியல் அமைப்புகள், சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை மற்றும் தேர்தல் முறைமைகளை உள்ளடக்கியதாக காணப்படும். அவை அனைத்தும் எழுதப்பட்ட சட்டங்கள், ஸ்தாபிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் செயற்படுவனவாகும்.
- இவ் முறைசார்ந்த அரசியல் நிறுவனங்கள் அரசியல் செயற்பாட்டாளர்களின் அதிகாரங்களை, கடமைகளை மற்றும் பொறுப்புக்களை வரையறுப்பதுடன் நாட்டின் ஆளுகைக்கான சட்டக் கட்டமைப்பினை வழங்குகின்றது.
- முறைசாரா அரசியல் நிறுவனங்கள் முறையான சட்ட கட்டமைப்புக்கு வெளியில் அரசியல் நடத்தைகள் மீது செல்வாக்கு செலுத்தும் விழுமியங்கள், மரபுகள், சம்பிரதாயங்கள் மற்றும் எழுதப்படாத அரசியல் நடைமுறைகளை உள்ளடக்கியதாக காணப்படும்.
- முறைசாரா அரசியல் நிறுவனங்கள் எப்பொழுதும் முறைசார் அரசியல் நிறுவனங்களுடன் செயல்படுவதுடன், அரசியல் நிறுவனங்கள் நடைமுறையில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதில் குறிப்பிடத்தக்க பாதிப்பினைச் செலுத்தும்.
- அரசியல் நிறுவனங்கள் தொடர்பாக ஆய்வு செய்பவர்கள் நிறுவனங்கள் எவ்வாறு ஒழுங்கமைந்துள்ளன அல்லது கட்டமைக்கப்பட்டுள்ளன, அவை எவ்வாறு அரசியல் அதிகாரத்தினை பகிர்ந்து கொள்கின்றன மற்றும் அவை எவ்வாறு தடைகள் மற்றும் சமன்பாடுகளை உள்வாங்கியுள்ளன போன்ற விடயங்களையே ஆராய்கின்றார்கள்.

- இவ் உப துறையானது காலவோட்டத்தில் அரசியல் நிறுவனங்கள் எவ்வாறு மாற்றமடைகின்றன, அத்தகைய மாற்றங்கள் எவ்வாறு அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் ஆளுகை செயற்பாடுகளை பாதிக்கின்றன என்பது பற்றியும் பரிசீலனை செய்கின்றது.
- ஒப்பிட்டு அரசியல் நிறுவன கற்கையானது நிறுவன ஏற்பாடுகள் ஏன் நாடுகளுக்கிடையில் வேறுபடுகின்றன மற்றும் இத்தகைய வேறுபாடுகள் எவ்வாறு ஆட்சி முறைகள் மற்றும் ஆளுகை கொள்திறனை செம்மைப்படுத்துகின்றன என்பதனை ஆய்வுக்குட்படுத்துகின்றது.
- அரசியல் நிறுவனங்கள் தொடர்பான கற்கை மிகவும் முக்கியமானது, காரணம் அரசியல் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படுவதும், இடம்பெறுவதும் நிறுவன சட்டகத்திற்குள்ளேயாகும்.
- அரசியல் செயற்பாடுகளான தேர்தல்கள், சட்டங்களை உருவாக்குதல் மற்றும் கொள்கை அமுலாக்கம் என்பன அரசியல் நிறுவனங்களை மையப்படுத்தியே இடம்பெறுகின்றன.
- சமூகத்தில் உள்ள மிக முக்கிய அரசியல் நிறுவனங்களாக அரசு, அரசாங்கம், அரசியல் கட்சிகள், அமுக்ககுழுக்கள் மற்றும் அரசியல் நலன் சார்ந்து செயற்படுகின்ற சிவில் சமூக அமைப்புகளை குறிப்பிடலாம்.
- ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது அரசியல் நிறுவனங்கள் பற்றிய கற்கையானது, அரசியல் அதிகாரம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது அல்லது பிரயோகிக்கப்படுகின்றது, அரசியல் ஒழுங்கு எவ்வாறு பேணப்படுகின்றது மற்றும் எவ்வாறு பிரஜைகள் அரசுடன் தொடர்பு கொள்கிறார்கள் போன்றவற்றினை விளங்கிக் கொள்வதற்கு அவசியமான ஆழ்ந்த அறிவினை வழங்குகின்றது.

### ii. அரசியல் கோட்பாடுகள்

- அரசியல் கோட்பாடானது அரசியல் விஞ்ஞானத்தின் மிகப் பிரதானமான உப துறையாக காணப்படுவதுடன், அது அரசியல் வாழ்க்கை மற்றும் அரசியல் நிறுவனங்களை செம்மைப்படுத்துகின்ற சிந்தனைகள், எண்ணக்கருக்கள் மற்றும் நெறிமுறைசார் தத்துவங்களைப் பரிசீலனை செய்கின்றது.
- அரசியல் கோட்பாட்டின் பிரதான நோக்கமாக அமைவது பின்வரும் அடிப்படை வினாக்களுக்கு விடை தேடுவதாகும்.
  - ✓ நீதி என்றால் என்ன மற்றும் அது எவ்வாறு அடையப்பட வேண்டும்?
  - ✓ சட்ட ரீதியான அரசியல் அதிகாரத்துவத்தினை உருவாக்கும் காரணிகள் எவை?
  - ✓ பிரஜைகள் கொண்டிருக்க வேண்டிய உரிமைகள் மற்றும் கடமைகள் எவை?
  - ✓ அரசின் உண்மையான வகிபங்கு மற்றும் தார்மீக நோக்கங்கள் எவை? என்பனவாகும்.
- அரசியல் கோட்பாடானது ஒப்பீட்டு அரசியல் மற்றும் சர்வதேச அரசியல் போன்ற கற்கைகளில் கையாளப்படும் அனுபவரீதியான தரவு மற்றும் பகுப்பாய்வுகளில் ஈடுபடாது, அடிப்படையில் நெறிமுறைசார்ந்த பகுப்பாய்விலேயே கவனம் செலுத்துகின்றது. ஆயினும் சில சமயங்களில் அனுபவ ரீதியான பகுப்பாய்விலும் (Empirical Analysis) ஈடுபடும்.
- இவ் உப துறையானது பல பிரதான மரபுகளைக் கொண்டுள்ளது. அந்த வகையில் பின்வருவனவற்றினைக் குறிப்பிட முடியும்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

### 1. புராதன அல்லது பழமை அரசியல் கோட்பாடு :

- பிளேட்டோ, அரிஸ்டோட்டில், ஹொப்ஸ் ஆகியோரை மையமாகக் கொண்டமைந்ததுடன், சில முக்கிய அரசியல் எண்ணக்கருக்களான அரசு, குடியுரிமை, இறைமை மற்றும் சட்டம் என்பவற்றின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது.

### 2. நவீன மற்றும் சமகால அரசியல் கோட்பாடு :

- இதில் தாராண்மைவாதம், மார்க்சிசம், ஜனநாயக கோட்பாடு மற்றும் பின்காலனித்துவக் கோட்பாடுகள் அடங்குவதுடன், அவை சமகால சவால்களான முதலாளித்துவம், ஜனநாயகம் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் தீவிரமாக அதிகரித்து வரும் பொருளாதார அசமத்துவம் போன்றவற்றுக்கு பதில் கொடுப்பதற்கு முற்படுகின்றன.
- அரசியல் கோட்பாடு அரசியல் விஞ்ஞான கற்கையில் பல வழிகளில் முக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக சில முக்கிய அரசியல் எண்ணக்கருக்களுக்கு எண்ணக்கரு சார்ந்த விளக்கத்தினை வழங்குகின்றது. உதாரணமாக சுதந்திரம், சமத்துவம், அதிகாரம், அதிகாரத்துவும் என்பவற்றினை குறிப்பிட முடியும்.
- அரசியல் கோட்பாடு அரசியல் நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகளை மதிப்பீடு செய்வதற்கு நெறிமுறைசார் தர நிர்ணயங்களை (Normative Standards) வழங்குகின்றது
- அரசியல் கோட்பாடு ஆளுகை (Governance), காலனித்துவம், ஜனநாயகம் மற்றும் பொதுக் கொள்கை தொடர்பான விவாதங்களைச் செம்மைப்படுத்துகின்றது.
- பரந்த அடிப்படையில் அரசியல் கோட்பாடு இரண்டு பிரதான கோட்பாட்டு அணுகுமுறைகளைக் கொண்டுள்ளது. அவையாவன :

### 1. நெறிமுறைசார் கோட்பாடு :

- இது அறஞ்சார் அல்லது ஒழுக்கம்சார் நியாயப்படுத்தல் (பகுத்தறிதல்) மற்றும் விழுமிய மதிப்பீடு (Value Judgement) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், சிறந்த அரசியல் ஒழுங்கமைப்புகள், ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் பொது வாழ்க்கைக்கான வழிமுறைகளை முன்வைக்கின்றது. உதாரணமாக சட்டம் தொடர்பாக ரோல்ஸின் கோட்பாடு, குடியரசுவாதம் தொடர்பான பிலிப் பெட்டிடின் (Philip Pettit) கோட்பாடு.

### 2. விஞ்ஞானரீதியான (அனுபவ ரீதியான) கோட்பாடு :

- இது அரசியல் நிகழ்வுகளை, ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு அவதானிப்பு மற்றும் முறைமை பகுப்பாய்வுகள் ஊடாக விளக்க முற்படுகின்றது. அவை கோட்பாட்டு ரீதியான அனுமானங்களாக இருந்தாலும், பகுப்பாய்வின் போது அனுபவரீதியான ஆதாரங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- இருபதாம் நூற்றாண்டு மற்றும் சமகாலத்தில் அரசியல் கோட்பாடு பல்வேறு புதிய துறைகளுக்கு விரிவாக்கம் அடைந்துள்ளது. அவை வேறுபட்ட சமூக மற்றும் வரலாற்று சூழமைவுகளை பிரதிபலிக்கின்றன. உதாரணமாக லிபரல் மற்றும் நவ லிபரல் கோட்பாடுகள், மார்க்சிசம் மற்றும் பெண்ணியல்வாதம், பின் காலனித்துவக் கோட்பாடு என்பவற்றினை குறிப்பிட முடியும்.

சில சமயங்களில் விமர்சனக் கோட்பாடும் இதில் உள்ளடக்கப்படுகின்றது.

- ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது அரசியல் கோட்பாடுகள் அரசியல் விஞ்ஞானத்திற்கு அறிவுசார் மற்றும் தத்துவார்த்த அடிப்படைகளை வழங்குகின்றது எனலாம்.

### iii. அரசியல் கருத்தியல்கள்

- அரசியல் கருத்தியல் என்பது நீண்ட கால அறிவுசார் வரலாற்றினை கொண்ட, நன்கு ஸ்தாபிக்கப்பட்ட, அரசியல் விஞ்ஞான உப துறையாக காணப்படுகின்றது. அரசியல் சிந்தனைகள், அரசியல் நடத்தை மற்றும் நிறுவனங்களை செம்மைப்படுத்துகின்ற சிந்தனைகளை முறையாகக் கற்பதில் கவனம் செலுத்துகின்றது.
- அடிப்படையில் அரசியல் கருத்தியல் உறுதியான நம்பிக்கைகள், விழுமியங்கள் மற்றும் சிந்தனைகளை குறித்து நிற்பதுடன், அதனூடாக தனிப்பட்டவர்களும், குழுக்களும் அரசியல் உலகினை வியாக்கியானம் (விளக்குதல்) செய்வதுடன் சமூக மற்றும் அரசியல் வாழ்வினை ஒழுங்கமைக்க முற்படுகிறார்கள்.
- அரசியல் கருத்தியல்கள் சமூகம், அதிகாரம், அதிகாரத்துவம் மற்றும் நீதி தொடர்பான புரிதலைப் பெற்றுக் கொள்வதற்கு எண்ணக்கரு சார்ந்த அடிப்படைகளை வழங்குகின்றன. அத்துடன் சமூகம் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட வேண்டும், அதிகாரம் எவ்வாறு பங்கீடு செய்யப்பட வேண்டும் மற்றும் அரசு எவ்வாறான இலக்குகளை பின்பற்ற வேண்டும் என்பவற்றினை விளக்குவதற்கான சட்டகமொன்றினை வழங்குகின்றது.
- ஒரு உபதுறை என்ற வகையில் அரசியல் கருத்தியலானது பின்வருவனவற்றினை பரிசீலனை செய்கின்றது.
  - ✓ கருத்தியல்களின் தோற்றம் மற்றும் வரலாற்று ரீதியான வளர்ச்சி
  - ✓ கருத்தியல்களின் பிரதான கூறுகள் மற்றும் உள்ளார்ந்தக் கட்டமைப்பு
  - ✓ அரசியல் முறைமைக்குள், நிறுவனங்கள் மற்றும் ஆளுகை கட்டமைப்புக்குள் கருத்தியல்களின் தொழிற்பாடுகள் என்பனவாகும்.
- அரசியல் கருத்தியல்கள் அரசியல் முறைமைகளினை செம்மைப்படுத்துவதில் மிக முக்கிய வகிபங்கினைக் கொண்டுள்ளன. அவை பின்வருமாறு :
  - ✓ அரசியல் நிறுவனங்களின் வடிவமைப்பு (கட்டமைப்பு) மற்றும் தொழிற்பாடுகளின் மீது செல்வாக்கு செலுத்துதல்
  - ✓ கட்சி முறைமைகள் மற்றும் அரசியல் போட்டியினைக் கட்டமைத்தல்
  - ✓ பொதுக் கொள்கைத் தெரிவு மற்றும் அரசியல் நடத்தைகளுக்கான வழிகாட்டுதல்
- அரசியல் கருத்தியல்கள் அரசியல் ஒழுங்கினை தக்கவைப்பதற்கு/பேணுவதற்கு அவசியமான சமூக ஒத்திசைவு, சமூகங்கள் மற்றும் சமூக குழுக்களுக்கு பகிரப்பட்ட விழுமியங்கள், நியமங்கள் மற்றும் கூட்டு அடையாளத்தினை வழங்கும் பணியினையும் மேற்கொள்கின்றது.


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- பிரதான அரசியல் கருத்தியல்களான **தராண்மைவாதம், சோசலிசம், ஜனநாயகம், சமூக ஜனநாயகம், பாசிசம், நவ தாராளவாதம், தேசியவாதம், பெண்ணியல்வாதம் மற்றும் சூழலியல்வாதம்** என்பன வேறுபட்ட வரலாற்று மற்றும் புவியியல் சூழல்களில் இடம்பெற்ற, இடம்பெறும் அரசியல் செயன்முறைகள் மற்றும் செயற்படுகின்ற அரசியல் நிறுவனங்கள் மீது ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.
- அரசியல் கருத்தியலை பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் ஆய்வாளர்கள்,
  - ✓ கருத்தியல் மரபுகளின் உள்ளடக்கம் மற்றும் நெறிமுறைசார் அனுமானங்கள்
  - ✓ அரசியல் கருத்தியல்கள் அரசியல் அதிகாரத்தையும், அதிகாரத்துவத்தினையும் சட்டரீதியாக்கும் வழிமுறைகள்
  - ✓ வெகுஜன ஆதரவினை திரட்டுவதில் மற்றும் அரசியல் செயற்பாடுகளின் மீது செல்வாக்கு செலுத்துவதில் அவற்றின் வகிபங்கு என்பவற்றில் கவனம் செலுத்துகிறார்கள்.
- ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது அரசியல் கருத்தியல்கள் என்பவை வெறுமனே கருத்துச் சாரம் மாத்திரமல்ல, அவை அரசியல் வாழ்வில் பலமான சக்தியாகக் காணப்படுகின்றது. அவை சமூகத்தில் பெரும் பகுதியானவர்களை அணிதிரட்டுகின்ற வலிமையினை கொண்டிருப்பதுடன், அரசியல் இயக்கங்கள், கொள்கைகள் மற்றும் அரசின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### iv. ஒப்பீட்டு அரசியல்

- ஒப்பீட்டு அரசியல் அரசியல் விஞ்ஞானத்தின் ஒரு பிரதான உப துறையாகக் காணப்படுகின்றது. இது வேறுபட்ட சூழமைவுகளில் செயற்படுகின்ற அரசியல் முறைமைகள், நிறுவனங்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் செயன்முறையினை அனுபவ ரீதியான ஆதாரங்களுடன் பகுப்பாய்வு செய்கின்றது.
- ஒப்பீட்டு அரசியல் 1950களில் அமெரிக்க அரசியல் விஞ்ஞானத்தின் முக்கிய உப துறையாக வளர்ச்சி அடைந்தது. அதன் பின்னர் உலகளாவிய ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அறிவுசார் பரிசீலனைக்கான துறையாக வளர்ச்சி அடைந்தது.
- அரசியல் கோட்பாடு போல் நெறிமுறைகள் மற்றும் தத்துவார்த்த அடிப்படைகள் மீது கவனம் செலுத்தாமல் (நீதி/ ஜனநாயகம்/ சட்டத்தின் ஆட்சி/ குடியுரிமை/ சமத்துவம்) ஒப்பீட்டு அரசியல் அவதானிப்பு/ அளவிடுதல் போன்ற முறைகளைப் பயன்படுத்தி யதார்த்த உலகின் அரசியல் நிகழ்வுகளை விளக்க முற்படுகின்றது.
- இவ் உப துறையானது பின்வரும் விடயங்களின் மீது கவனம் செலுத்துகின்றது
  - ✓ **அரசியல் முறைமைகளைக் கற்றல் :** குறிப்பாக தேசிய அரசுகள், பிராந்தியங்கள் மற்றும் உபதேசிய அலகுகள் மீது கவனம் செலுத்துகின்றது.
  - ✓ **அரசியல் முறைமைகளின் போக்குகள்,** ஒற்றுமை மற்றும் வேற்றுமை என்பவற்றினை முறையாக ஒப்பீடு செய்தல்.
- ஒப்பீட்டு அரசியல் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கும் நோக்குடன் அரசியல் முறைமைகளுக்கிடையிலான ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை அடையாளம் காண்பதனை மைய இலக்காகக் கொண்டுள்ளது.

- ✓ அரசியல் முறைமைகள் எவ்வாறு வேறுபடுகின்றன,
- ✓ எந்தளவிற்கு இந்த வேற்றுமைகள் முக்கியமானவை,
- ✓ எத்தகைய சமூக, பொருளாதார, நிறுவன மற்றும் வரலாற்றுக் காரணிகள் இத்தகைய வேற்றுமைகளை விளக்குகின்றன என்பனவாகும்.

- ஒப்பீட்டு அரசியல் மூன்று முக்கிய பகுப்பாய்வு நோக்கங்களை கொண்டுள்ளன.
    - ✓ **விபரித்தல்:** அரசியல் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை அடையாளம் கண்டு, வகைப்படுத்தி விவரிப்பது,
    - ✓ **விளக்குதல்:** அரசியல் முறைமைகள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட வேறுபாடுகளுக்குப் பின்னால் இருக்கும் காரண- காரிய தொடர்புகளை விளக்குதல்.
    - ✓ **எதிர்வுகூறல்:** பகுப்பாய்வு முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு பொதுமைப்படுத்தல்களை மேற்கொண்டு அரசியல் விளைவுகளை எதிர்வு கூறல்.
- இவ் உப துறையின் பிரதான தத்துவம் யாதெனில், அரசியல் தொடர்பான பொதுமைப்படுத்தக்கூடிய அறிவினை, ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களை(Cases) ஆய்வு செய்வதன் ஊடாக மாத்திரமே சாத்தியமாகும் என்பதாகும்.
- ஒப்பீட்டு அரசியல் கற்கையின் வரலாறானது அரிஸ்டோட்டிலுடன் ஆரம்பித்ததோடு இவர் மிகவும் சிறப்பான அரசியலமைப்பினை முன்வைப்பதற்காக கிரேக்கத்தில் காணப்பட்ட புராதன நகர அரசுகள் பலவற்றையும் ஆய்வு செய்தார். மக்கியவல்லியும் இவ்வணுகுமுறையை பயன்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
- இதன்படி மூன்றாம் உலக நாடுகளிலும், ரஸ்யா உள்ளிட்ட சமவுடைமை நாடுகளிலும், அரசியல் மற்றும் அரசியல் முறைமைகளில் காணப்பட்ட வேறுபாடுகளை அறிந்து கொள்வதற்கு உதவியது. இவ்வாறு ஒவ்வொரு நாடுகளிலும் அரசியலை ஒப்பீட்டு ரீதியாக ஆராய்வதன் மூலம் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக பொதுவில் ஏற்றுக்கொள்ளும் பொதுமைப்படுத்தப்பட்ட முடிவுகளுக்கு வருவதற்கு உதவியது.
- உதாரணம்: தேர்தல் முறைமை வாக்காளர் நடத்தையில் தாக்கம் செலுத்தும் விதத்தினை நாடுகள் சிலவற்றினை ஆய்வு செய்து பொது முடிவுகளுக்கு (பொதுமைப்படுத்தப்பட்ட) வர முடியும்.
- ஒப்பீட்டு அரசியல் ஊடாக பின்வரும் விடயங்களை மேற்கொள்ள கூடியதாக உள்ளது. அவையாவன,
    - ✓ நாடுகளுக்கிடையேயான ஒப்பீடுகளை மேற்கொள்ள முடியும். உதாரணமாக அரசியல் கட்சி முறைமை, அரசாங்க முறைமைகள் பற்றி நாடுகள் சிலவற்றினை மையப்படுத்தி ஒப்பீடு செய்தல்.
    - ✓ ஒரு நாட்டினுள்ளும் ஒப்பீடு செய்ய முடியும். உதாரணமாக இலங்கை பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தலில் மக்களின் பங்குபற்றல் மற்றும் வாக்காளர் நடத்தை.
    - ✓ அரசறிவியலில் முக்கியமான கருத்தியல்களை சர்வதேச ரீதியில் ஒப்பீட்டு ஆராய முடியும். உதாரணமாக, ஜனநாயக பரிமாற்றம், ஜனாதிபதி அரசாங்க முறைமையின் சாதக பாதக தன்மை, விகிதாசார பிரதிநிதித்துவ முறை, பிரதிநிதித்துவ ஜனநாயக முறையில் ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் பெண்களின் அரசியல் பங்குப்பற்றலின் போக்குகள்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

02) **"நிச்சயிக்கப்பட்ட ஆள்புல எல்லைகளுக்குள் இறைமை அதிகாரத்தினைப் பிரயோகிக்கும் மிக உயர்ந்த அரசியல் நிறுவனமே அரசாகும்." ஆராய்க.**

**(20 புள்ளிகள்)**

அரசு என்பது நிச்சயிக்கப்பட்ட ஆள்புல எல்லைக்குள் வாழும் மக்கள் மீது அதிகாரத்தினைப் பிரயோகிக்கும் மிக உயர்ந்த அரசியல் நிறுவனம் என பொதுவாக வரையறை செய்யப்படுகின்றது. அது மிக உயர்ந்த அரசியல் ஒழுங்கமைப்பாக கருதப்படுவதுடன், ஏனைய சமூக, அரசியல் நிறுவனங்களை விட மேலான நிலையில் காணப்படுவதுடன், ஏனைய எந்த ஒழுங்கமைப்புகளுக்கும் இல்லாத அதிகாரத்தினைக் கொண்ட நிறுவனமாக காணப்படுகின்றது.

அரசினை மிகத் தெளிவாக வரையறை செய்கின்ற முக்கியப் பண்பாக இறைமையினைக் குறிப்பிட முடியம். ஒரு நிச்சயிக்கப்பட்ட ஆள்புலத்திற்குள் செயற்படும் அரசு கொண்டுள்ள மேலான, தனிமுதன்மையான மற்றும் சட்டரீதியான வரையறையற்ற அதிகாரத்துவத்தினை குறித்து நிற்கின்றது. அரசு, இறைமை அதிகாரத்தினைக் கொண்டிருப்பதனால் ஏனைய ஒழுங்கமைப்புகளின் அடிபணிவினையும் கட்டளையிடும் இயலுமையினையும் கொண்டுள்ளது. அத்துடன், அரசுக்கு மேலான எந்த நிறுவனமும் சமூகத்தில் காணப்படுவதில்லை. ஏனைய நிறுவனங்களான குடும்பம், சமய நிறுவனங்கள், தனியார் கம்பனிகள் மற்றும் சிவில் சமூகம் என்பவை அரசினால் ஸ்தாபிக்கப்பட்ட சட்ட ஒழுங்குகளுக்கு உட்பட்டு செயற்பட வேண்டும் என்பதுடன் அவை அரசுக்கு கீழ்பட்டவையாக கருதப்படுகின்றன.

மேலான அரசியல் நிறுவனம் என்ற வகையில் அரசானது பலவந்த அதிகாரத்தினை சட்டரீதியாகப் பிரயோகிக்கும் தனிமுதன்மை அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. அரசு, பொலிஸ், இராணுவம் மற்றும் நீதிமன்றங்கள் ஊடாக தான் உருவாக்கிய சட்டங்களுக்கு பிரஜைகள் அடிபணிவதனை உறுதிசெய்வதுடன், அவற்றினை மீறுவோருக்கு எதிராகத் தண்டனை வழங்குகின்றது. பலவந்தம் என்பது அரசின் அதிகாரத்துவத்தினை குறித்து நிற்கின்றது. ஆகவே, கீழ்ப்படிதல் என்பது கட்டாயப்படுத்தலால் மாத்திரம் இடம்பெறுவதில்லை. அரசின் செயற்பாடுகள் சட்டத்தன்மைக் கொண்டவை. காரணம், அரசின் தீர்மானங்கள் பொதுவில் கட்டுப்படுத்தலைக் கொண்டிருக்கும். ஏனென்றால், அரசின் தீர்மானங்கள் பொது நலன் மற்றும் பொது நன்மையினை நோக்காகக் கொண்டவையாகும்.

அரசு என்பது ஓர் ஆள்புலத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கமைப்பாகும். அதன் அதிகாரத்துவம் நிச்சயிக்கப்பட்ட எல்லைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். அரசின் அதிகாரத்துவம் அரசின் ஆள்புல எல்லைக்குள் வாழும் எல்லா தனிநபர்கள் மீதும் பிரயோகிக்கப்படும். இது உலகளாவிய பண்பாகும். அரசின் அதிகாரத்துவம் கட்டாயமானது. காரணம், தனிநபர்கள் அரசின் நியாயாதிக்க எல்லையினை விட்டு விலகி இருக்க முடியாது. இப்பண்புகளானது அரசினை ஏனைய அரசியல் மற்றும் சமூக ஒழுங்கமைப்புகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது.

எவ்வாறாயினும், மேற்கூறிய அரசு தொடர்பான மரபார்ந்த எண்ணக்கரு தற்காலத்தில் சவால்களுக்கு உள்ளாகியுள்ளது. குறிப்பாக, உலகமயமாக்கம், பல்தேசிய மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள், பலம் வாய்ந்த அரசுசாரா செயற்பாட்டாளர்கள், பயங்கரவாத வலையமைப்புக்கள் அரசின் சுயாதீனத்தன்மையினை கட்டுப்படுத்தியுள்ளதுடன் இறைமை அதிகாரத்தின் எல்லைகளை கேள்விக்குறியாக்கியுள்ளன. அரசின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் செயற்படுகின்ற நிறுவனங்கள் அரசின் பொருளாதார மற்றும் ஒழுங்குப்படுத்தல் தீர்மானங்கள் மீது அதிகம் செல்வாக்கு செலுத்துகின்றன. (உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமையம்)

இத்தகைய சவால்கள் காணப்பட்டாலும், அரசு என்பது அரசியல் வாழ்வின் மைய செயற்பாட்டாளராக தொடர்ந்தும் காணப்படுகின்றது. அது தொடர்ந்தும் சட்டங்களை உருவாக்கி அமுல்படுத்துகின்றது. சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணுகின்றது. ஆள்புல எல்லைக்குள் அரசியல் அதிகாரத்துவத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இவ்வினாவுக்கு விடையளிக்கும் போது பரீட்சார்த்திகள் பின்வரும் விடயங்களையும் கலந்துரையாடியிருக்கலாம்.

1. **அரசு தொடர்பான அரிஸ்டோட்டிலின் விளக்கம்:** அரசு என்பது மானிட ஒழுங்கமைப்பாகும். அது மிக உயர்ந்த மானிட ஒழுங்கமைப்பாகும். காரணம், ஒட்டுமொத்த சமூகத்தினதும் மேலான சமூக நலனை அடைந்து கொள்வதே அரசின் நோக்கமாகும். ஏனைய நிறுவனங்கள் தமது உறுப்பினர்களின் நலன்களில் மாத்திரமே அக்கறை செலுத்துகின்றன.
2. **மெக்ஸ் வெபரின் விளக்கம்:** 19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஜேர்மனிய சமூக கோட்பாட்டாளர். அவர், குறிப்பிட்டதொரு ஆள்புல எல்லைக்குள் சட்டரீதியாக வன்முறையினை பிரயோகிப்பதற்கான ஏகபோக உரிமையினை கோருகின்ற மானிட சமுதாயமே அரசு என வரையறை செய்தார்.

இவ்விளக்கமானது அரசினை ஏனைய நிறுவனங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. வன்முறையினைப் பயன்படுத்த அரசு கொண்டிருக்கும் ஏகபோக உரிமை, பலவந்த அதிகாரம் மற்றும் சட்ட ரீதியான உரிமை என்பன அரசின் முக்கியப் பண்புகளாகக் காணப்படுகின்றன.

அரசு வன்முறையினைப் பயன்படுத்தி தனிநபர்களைக் கட்டுப்படுத்துகின்றது. ஒழுக்கத்தை ஏற்படுத்த முற்படுகின்றது மற்றும் ஆள்புல எல்லைக்குள் வாழும் அனைவரையும் தண்டிக்கின்றது. ஆகவே, அரசு கொண்டுள்ள அதிகாரத்தினை சமூகத்தில் உள்ள ஏனைய எந்த நிறுவனமும் கோர முடியாது. அரசின் இறைமை அதிகாரத்தினை ஏனைய நிறுவனங்கள் பிரயோகிப்பதற்கு அரசின் அனுமதி அவசியமாகும்.

**முடிவுரை : 2 புள்ளிகள்**

**குறிப்பு :** இவ்வினாவிற்கு பரீட்சார்த்திகள் அறிமுகம் ஒன்றினை சரியான முறையில் எழுதியிருந்தால் 2 புள்ளிகளை வழங்கவும். அறிமுகம், முடிவுரை இல்லாவிட்டால் விடையின் தரம் மற்றும் முன்வைப்புத்திறன் போன்ற விடயங்களை கருத்திற் கொண்டு அறிமுகம் மற்றும் முடிவுரைக்கு வழங்கப்படும் புள்ளிகளை உள்ளடக்கத்திற்கு வழங்கவும்.

* [illegible] – [illegible]
* [illegible] – [illegible]
* [illegible]



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

03. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு அரசாங்க முறைகளின் பிரதானப் பண்புகளை ஆராய்க.

i) ஜனாதிபதித்துவ அரசாங்க முறை
ii) பாராளுமன்ற அரசாங்க முறை
iii) அர்த்த (கலப்பு) ஜனாதிபதித்துவ அரசாங்க முறை

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

i) ஜனாதிபதித்துவ அரசாங்க முறை

ஜனாதிபதித்துவ அரசாங்க முறை என்பது இறுக்கமான அதிகாரப் பிரிவினை மற்றும் சட்டத்துறை – நிறைவேற்றுத்துறை என்பவற்றுக்கிடையிலான தெளிவான வேறுபாட்டினை முக்கிய பண்பாகக் கொண்டதொரு அரசாங்க முறையாகும். இவ்வரசாங்க முறையின் பிரதானப் பண்புகளாக பின்வருவனவற்றினைக் குறிப்பிட முடியும்.

- இவ்வரசாங்க முறையில் சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறை என்பவற்றுக்கிடையில் முறைசார்ந்த மற்றும் அரசியலமைப்பு ரீதியான வேறுபாடுகள் காணப்படும்.
- நிறைவேற்றுத்துறையும் (ஜனாதிபதி) சட்டத்துறையும் தனித்தனியான தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்படுகின்றன.
- இவை இரண்டும் தமது அதிகாரங்களை அரசியலமைப்பு மற்றும் தேர்தல் மூலம் மக்கள் வழங்கும் ஆணையின் மூலம் பெற்றுக்கொள்கின்றனர்.
- நிறைவேற்றுத்துறை அதிகாரம் முழுமையாக ஜனாதிபதியிடம் காணப்படும். அமைச்சரவை அமைச்சர்கள் ஆலோசகர்களாகவும் நிர்வாகிகளாகவும் செயற்படுவர். அவர்கள் ஜனாதிபதிக்கு கூட்டாகப் பொறுப்புக்கூற வேண்டும். ஆனால் பாராளுமன்றத்துக்கு அல்ல.
- ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு அரசியலமைப்பு ரீதியாகப் பொறுப்புக்கூறுவதில்லை. ஜனாதிபதி தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்கு பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற வேண்டிய அவசியமில்லை.
- ஜனாதிபதியின் பதவித் தவணைக்காலம் நிச்சயிக்கப்பட்டிருக்கும். ஆகவே ஜனாதிபதியினை சாதாரண அரசியல் செயன்முறைகளின் மூலம் சட்டத்துறை பதவி நீக்க முடியாது.
- ஜனாதிபதியினை பதவி நீக்குவது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றப்பிரேரனை ஒன்றின் மூலம் பதவி நீக்கம் செய்யும் செயன்முறை ஊடாகவே சாத்தியமாகும்.
- மேலும் சட்டத்துறை ஜனாதிபதியினை சாதாரண செயன்முறை ஒன்றின் மூலம் எவ்வாறு பதவி நீக்க முடியாதோ, அதேபோல் ஜனாதிபதியும் சட்டத்துறையினை கலைக்கும் அதிகாரத்தினைக் கொண்டிருப்பதில்லை. இதன்மூலம் தடைகள் மற்றும் சமன்பாடுகள் உறுதி செய்யப்படுவதுடன், நிறுவன சுயாதீனத்தன்மையும் உறுதி செய்யப்படுகின்றது.
- ஜனாதிபதி அரசின் தலைவர் மற்றும் அரசாங்கத்தின் தலைவர் என்ற இரு பதவி நிலைகளையும் கொண்டிருப்பார்.

**குறிப்பு : பரீட்சார்த்திகள் மேற்கூறியவற்றில் ஏதேனும் ஐந்து விடயங்களைக் குறிப்பிட்டிருந்தால் முழுமையான புள்ளிகளை வழங்கவும்.**

### ii) பாராளுமன்ற அரசாங்க முறை

பாராளுமன்ற அரசாங்க முறை என்பது சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத் துறைக்குமிடையில் மிக நெருங்கியத் தொடர்புக் காணப்படும் அரசாங்க முறையாகும். இங்கு நிறைவேற்றுத்துறை தமது அதிகாரத்தினை சட்டத்துறையில் இருந்து பெற்றுக்கொள்வதுடன், சட்டத்துறைக்கு பொறுப்புக்கூறுவதும் கட்டாயமாகும். இவ்வரசாங்க முறையின் பிரதானப் பண்புகளாக பின்வருவனவற்றினைக் குறிப்பிட முடியும்.

- பாராளுமன்றத் தேர்தல் ஒன்றின் ஊடாக அரசாங்கமொன்று உருவாக்கப்படுகின்றது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தினைப் பெற்ற அரசியல் கட்சி அல்லது கட்சிகளின் கூட்டணி நிறைவேற்றுத்துறை அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்கின்றது.
- அரசியல் நிறைவேற்றுத்துறையின் உறுப்பினர்கள், குறிப்பாக பிரதமர் மற்றும் அமைச்சரவை அமைச்சர்கள் சட்டத்துறையில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றார்கள். இதன் மூலம் சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறை என்பன நிறுவன ரீதியாக பிணைக்கப்பட்டிருப்பதனை அவதானிக்கலாம்.
- அரசாங்கம் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையினை மற்றும் நம்பிக்கையினை கொண்டிருக்கும்வரையில் பதவியில் இருக்கும். அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரனையொன்று கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படும் பொழுது, அரசாங்கம் பதவி விலக வேண்டும். ஆகவே அரசாங்கத்தின் இருப்பு பாராளுமன்றத்தின் நம்பிக்கையில் தங்கியுள்ளது.
- அரசியல் நிறைவேற்றுத்துறை கூட்டாக சட்டத்துறைக்குப் பொறுப்புக்கூற வேண்டும். அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பாக சட்டத்துறைக்குப் பொறுப்புக்கூற வேண்டும். அவற்றுக்கு சட்டத்துறையின் ஆதரவு அவசியமாகும். கூட்டுப்பொறுப்புத் தத்துவம் பேணப்படும்.
- பெரும்பாலான பாராளுமன்ற அரசாங்க முறைகளில் பிரதமர் பாராளுமன்றத்தினை கலைத்து புதிய தேர்தல் ஒன்றினை அறிவிக்கும் அதிகாரத்தினைக் கொண்டுள்ளார். இது இருதுறைகளும் (சட்டத்துறை- நிறைவேற்றுத்துறை) ஒன்றில் ஒன்று பரஸ்பரம் தங்கியிருப்பதனை உறுதி செய்கிறது.
- இவ்வரசாங்க முறையின் கீழ் பாராளுமன்றச் செயற்பாடுகள் மந்திரி சபை அரசாங்க முறையின் தத்துவங்களுக்கேற்ப இடம் பெறுவதனால், இங்கு தனிநபரின் கையில் அதிகாரம் குவிக்கப்பட மாட்டாது, மாறாக கூட்டுத் தீர்மானம் எடுத்தலே முக்கியத்துவம் பெறுகின்றது.
- பிரதமர் அரசாங்கத்தின் தலைவராகவும் உண்மையான நிறைவேற்றுத்துறை அதிகாரங்களை பிரயோகிக்கின்ற நபராகவும் காணப்படுவார். அதேவேளை, அரசின் தலைவர் (முடி / மகா-தேசாதிபதி / ஜனாதிபதி) சம்பிரதாயபூர்வமான மற்றும் அரசியலமைப்புக் கடமைகளை நிறைவேற்றுவார்.
- அரசியல் நிறைவேற்றுத்துறையினரின் பதவித் தவணைக்காலம் வரையறுக்கப்பட்டிருக்காது. அவர்கள் பல தடவைகள் பதவியில் இருக்கலாம்.

**குறிப்பு : பரீட்சார்த்திகள் மேற்கூறியவற்றில் ஏதேனும் ஐந்து விடயங்களை குறிப்பிட்டிருந்தால் முழுமையான புள்ளிகளை வழங்கவும்.**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

### iii) அர்த்த (கலப்பு) ஜனாதிபதித்துவ அரசாங்க முறை

கலப்பு அரசாங்க முறையானது ஜனாதிபதித்துவ மற்றும் பாராளுமன்ற அரசாங்க முறைகளின் பண்புகளைக் கொண்ட கலவையாகும். இங்கு இரட்டை அரசியல் நிறைவேற்றுத்துறையினைக் காண முடியும். குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கிடையில் பகிரப்பட்டிருக்கும். இவ்வரசாங்க முறையின் பிரதானப் பண்புகளாவன:

- நிறைவேற்று அதிகாரம் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கிடையில் பகிரப்பட்டிருக்கும். இதற்கு அமைச்சரவையின் ஆதரவு வழங்கப்படும்.
- ஜனாதிபதி மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுவார். அவர் நேரடியாக தேர்தல் தொகுதிகளில் இருந்து மக்கள் ஆணையினைப் பெற்றுக் கொள்கின்றார்.
- பிரதமர் மற்றும் அமைச்சரவை சட்டத்துறையில் இருந்து தெரிவு செய்யப்படுவதுடன், சட்டத்துறைக்கு கூட்டாகப் பொறுப்புக் கூற வேண்டும். பாராளுமன்ற நம்பிக்கை இருக்கும் வரையில் இவர்கள் பதவியில் இருக்க முடியும்.
- இம்முறையின் கீழ் பொதுவாக ஜனாதிபதி பிரதமரை நியமிப்பார். பின்னர் பிரதமரின் ஆலோசனையின் படி ஏனைய அமைச்சரவை அமைச்சர்களை நியமிப்பார். (பிரான்ஸின் தற்போதைய அரசியல் நிலைமையினைக் கருத்தில் கொள்ளவும்).
- பிரதமர் பொதுவில் நாளாந்த உள்நாட்டு நிர்வாக செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருக்கும் அதேவேளை, ஜனாதிபதி வெளிநாட்டு கொள்கை, தேசியப் பாதுகாப்பு மற்றும் சர்வதேச விவகாரங்களை கையாள்வதில் பெரியளவிலான அதிகாரத்தினைக் கொண்டிருப்பார்.
- பிரதமர் மற்றும் அமைச்சரவை ஜனாதிபதிக்கும் சட்டத்துறைக்கும் பொறுப்புக்கூற வேண்டும். இது இவ்வரசாங்க முறையின் கலப்புத்தன்மையினை எடுத்துக் காட்டுகின்றது.
- ஜனாதிபதியின் பதவித் தவணைக்காலம் அரசியலமைப்பு ரீதியாக வரையறுக்கப்பட்டிருக்கும். பிரான்சிய ஜனாதிபதியின் பதவி ஆரம்பத்தில் ஏழு வருடங்கள் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக ஐந்து வருடமென குறைக்கப்பட்டது. அத்துடன் இரண்டு தடவைகள் மாத்திரமே பதவி வகிக்க முடியும்.
- ஜனாதிபதி சில சமயங்களில் அமைச்சரவையினை கலைக்க முடியும். அதேவேளை சில சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்தினையும் கலைக்க முடியும். இது சட்டத்துறை மீதான நிறைவேற்றுத்துறையின் செல்வாக்கினை எடுத்துக்காட்டுகிறது.

**குறிப்பு : பரீட்சார்த்திகள் மேற்கூறியவற்றில் ஏதேனும் ஐந்து விடயங்களை குறிப்பிட்டிருந்தால் முழுமையான புள்ளிகளை வழங்கவும்.**

## பகுதி – II

04. கோல்புருக் - கமரன் சீர்திருத்தத்துடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை ஆராய்க.

1. ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை
2. சுயாதீன நீதித்துறை ஒன்றுக்கான அடித்தளம் இடப்பட்டமை.
3. நிர்வாக முறைமையினை மத்தியமயப்படுத்தியமை.

(10×2= 20 புள்ளிகள்)

**i. ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை**

கோல்புருக் - கமரன் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன் ஆளுநர் தனி முதன்மை அதிகாரத்தினை கொண்டிருந்தார். அவர் இராணுவம், சட்டம் மற்றும் நிறைவேற்றுத்துறை அதிகாரங்களைக் கொண்டிருந்தார். சிவில் விடயங்கள் அல்லது சிவில் பிணக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கும் நீதித்துறை அதிகாரமும் அவரிடம் காணப்பட்டது.

கண்டிய மாகாணங்களில் குற்றவியல் விடயங்கள் தொடர்பாக இறுதி தீர்மானமெடுக்கும் அதிகாரமும் ஆளுநரிடமே காணப்பட்டது. எந்த ஒரு வழக்கு விசாரணையும் இன்றி, எந்தக் காரணத்தையும் குறிப்பிடாமல் எந்த ஒரு நபரையும் சிறையில் அடைக்கவும், விடுவிக்கவும் ஆளுநரால் முடியும். ஆளுநரின் அத்தகைய செயல்பாடுகள் தொடர்பாக கேள்வி கேட்க முடியாது. அவர் நீதிமன்ற நியாயாதிக்கங்களுக்கு அப்பாற்பட்டு காணப்பட்டார்.

இராஜகாரிய முறைமையின் கீழ் ஆட்களை பலவந்தமாக வேலைக்கு அமர்த்தும் அதிகாரத்தினைக் கொண்டிருந்தார். அத்துடன் தொழிலாளர்களின் சம்பளத்தினை நிர்ணயிப்பது, சம்பளம் வழங்காமல் இருத்தல், சாதி மற்றும் சம்பிரதாயங்களின் அடிப்படையில் வேலை வாங்குதல் போன்ற அதிகாரங்கள் காணப்பட்டன. நாட்டின் வளங்கள் மீது எல்லையற்ற கட்டுப்பாட்டினையும், ஏகபோக உரிமையினையும் கொண்டிருந்தார்.

ஆயினும் கோல்புருக் - கமரன் சீர்திருத்தத்தின் கீழ் ஆளுநர் கொண்டிருந்த சிறையில் அடைத்தல் மற்றும் குற்றவாளிகளை விடுவித்தல் போன்ற அதிகாரங்கள் இல்லாது செய்யப்பட்டன. நீதி தொடர்பான செயற்பாடுகள் முறையான நீதித்துறை கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டு, அதன் செயல்பாடுகளை முன்னெடுக்கும் அதிகாரங்கள் உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டு, ஆளுநர் அதுவரை காலமும் அனுபவித்த நீதித்துறைசார் அதிகாரங்கள் அனைத்தும் இல்லாது செய்யப்பட்டன.

ஆளுநரின் அதிகாரங்கள் சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறை தாபிக்கப்பட்டதோடு மேலும் வீழ்ச்சி அடைந்தது. அந்தவகையில் நாட்டின் வருமானம் மற்றும் செலவு தொடர்பான விடயங்களில் நிறைவேற்றுத்துறையுடன் கலந்தாலோசனை செய்து தீர்மானம் எடுக்க வேண்டும் என்ற ஏற்பாடு கொண்டு வரப்பட்டது. மேலும் சட்டம் சார்ந்த விடயங்களில் தன்னிச்சையாக முடிவெடுக்கும் நிலை இல்லாது செய்யப்பட்டு, சட்டத்துறையின் ஆலோசனையின் பெயரில் செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டதன் பின்னர் மக்கள் மீதும் (அடிமைத்தனம்) நாட்டின் வளங்களின் மீதும் ஆளுநர் கொண்டிருந்த அதிகாரங்கள் இல்லாது செய்யப்பட்டன.


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- கட்டற்ற வர்த்தகத்தின் அறிமுகத்தால் ஏற்றுமதி, இறக்குமதி செயற்பாடுகளில் அவருக்கு இருந்த ஏதேச்சதிகாரம் குறைக்கப்பட்டது.
- சட்ட நிர்வாக சபையின் ஆலோசனையை தேசாதிபதி கண்மூடித்தனமாக புறக்கணிக்க முடியாது. அவ்வாறு புறக்கணிப்பின் அதற்குரிய காரணத்தை குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.
- வரவு செலவுத்திட்ட விவகாரங்கள் தொடர்பாக விவாதிக்கும் அதிகாரம் 1838 களின் பின் சட்ட சபைக்கு வழங்கப்பட்டது. வரவு செலவுத்திட்ட விவகாரங்கள் தொடர்பாக தன்னிச்சையான அதிகாரங்கள் தேசாதிபதிக்கு குறைக்கப்பட்டது.

### ii. சுயாதீன நீதித்துறைக்கான அடித்தளம் இடப்பட்டமை

பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்பகாலக் கட்டங்களில் நீதித்துறையானது ஆளுநரில் தங்கியிருந்ததுடன், நிறைவேற்றுத்துறை மற்றும் இராணுவத்தின் செல்வாக்கிற்கும் உட்பட்டிருந்தது. ஆளுநர் நீதித்துறையின் பிரதானியாக காணப்பட்டார். கண்டிய மாகாணங்களில் குற்றவியல் பிணக்குகள் தொடர்பாக இறுதி தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தினை கொண்டிருந்தார். நீதிமன்றங்களின் நியாயாதிக்கங்களுக்கு அப்பால் காணப்பட்டார். வழக்கு விசாரணை இன்றி எந்த ஒரு நபரையும் சிறையில் அடைக்க மற்றும் விடுவிக்கும் அதிகாரத்தினை கொண்டிருந்தார்.

ஆயினும் கமரன் மேற்கொண்ட நீதித்துறைசார் மறுசீரமைப்புக்களின் காரணமாக நீதித்துறை விடயங்களில் ஆளுநர் கொண்டிருந்த தனிமுதன்மை அதிகாரம் இல்லாது செய்யப்பட்டது. உயர்நீதிமன்றம் ஒன்று தாபிக்கப்பட்டு நீதித்துறை சார்ந்த சகல செயற்பாடுகளும் அவ் உயர்நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டது. அதன் மூலம் நாட்டின் சுயாதீனமான நீதிமுறைக் கட்டமைப்புக்கான அடித்தளம் இடப்பட்டது. இன்னொரு வகையில் கூறுவதாயின் 1833ஆம் ஆண்டு நீதித்துறை நிறைவேற்றுத்துறையில் இருந்து வேறாக்கப்பட்டு, ஆளுநர் அதுவரை காலமும் கொண்டிருந்த நீதித்துறை அதிகாரங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

உயர்நீதிமன்றம் படிப்படியாக அதிகாரமிக்க மற்றும் சுயாதீனமான நிறுவனமாக மாறியதுடன், அதன் மீதான காலனித்துவ நிர்வாகிகளின் தலையீடும் குறைவடைந்தது. இதற்கு சிறந்த உதாரணமாக Bracegirdle சம்பவத்தில் (1937) உயர்நீதிமன்றம் செயற்பட்ட விதத்தினை குறிப்பிட முடியும். இச்சம்பவமானது இலங்கையின் சட்ட மற்றும் அரசியலமைப்பு வரலாற்றில் முக்கிய நிகழ்வாக பார்க்கப்படுவதுடன், பிரித்தானிய ஆட்சியின் கீழ் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையினையும் எடுத்துக்காட்டியது. அக்காலத்தில் உயர்நீதிமன்ற நீதிபதிகளாக பிரித்தானியர்களே காணப்பட்டனர்.

### iii. நிர்வாக முறைமையினை மத்தியமயப்படுத்தியமை

கோல்புருக் - கமரன் சீர்திருத்தம் முழு நாட்டிலும் ஒருமைப்படுத்தப்பட்ட அரசாங்க முறையொன்றினை உருவாக்கியது. இச்சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் இலங்கையில் மூன்று வகையான நிர்வாக முறைகள் காணப்பட்டன.

1. சிங்கள மக்கள் வாழ்ந்த கரையோர பிரதேசங்களில் ஒரு தனியான நிர்வாகமும்,
2. தமிழ் மக்கள் வாழ்ந்த கரையோரப் பிரதேசங்களில் தனியான நிர்வாகமும்,
3. கண்டி மாவட்டத்தில் தனியான நிர்வாகமும் காணப்பட்டது.

இப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் மரபுகள் மற்றும் சம்பிரதாயங்களை அடிப்படையாகக் கொண்டு நிர்வாகம் இடம்பெற்றது. இவ்வேற்பாடானது நிர்வாகம் மற்றும் பாதுகாப்புச் செலவினை ஏற்படுத்தியதுடன், சகல பிரதேசங்களில் வாழும் மக்களும் இணைந்து வாழ்வதற்கான வாய்ப்பினையும் இல்லாது செய்தது.

இதன் காரணமாகவே 1833ஆம் ஆண்டு சீர்திருத்தத்தின் கீழ் பொதுவான நிர்வாக முறையொன்று முழு நாட்டிற்கும் அறிமுகம் செய்யப்பட்டது. மாகாணங்கள் 16 இல் இருந்து ஐந்தாகக் குறைக்கப்பட்டது. புதிய மாகாணங்களுக்கான எல்லைகளைப் பிரிக்கும் பொழுது ஏனவே இருந்த மாகாண எல்லைகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

இதன்படி கண்டி மாகாணத்தில் காணப்பட்ட சில தாழ்நில மாவட்டங்கள் சிங்கள மற்றும் தமிழ் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட கரையோரப் பிரதேசங்களுடன் இணைக்கப்பட்டது. உதாரணமாக நுவரகலாவிய மாவட்டத்தின் ஒரு பகுதி வட மாகாணத்துடனும், பிறிதொரு பகுதி தென் மாகாணத்துடனும் இணைக்கப்பட்டது. கோல்புருக் சீர்திருத்தத்தின் கீழ் அரச அதிகாரிகள் முழு நாட்டிலும் பணிக்கமர்த்துவதற்கான பொதுவான முறைமை ஒன்றின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

**05. i) டொனமூர் அரசியலமைப்பின் ஊடாக நிறைவேற்றுக்குழு முறை ஏன் அறிமுகம் செய்யப்பட்டது.**

**(05 புள்ளிகள்)**

- அரசியல் கட்சி முறையொன்று வளர்ச்சியடையாத காரணத்தினால் இலங்கைக்கு மந்திரி சபை அரசாங்க முறையொன்றினை அறிமுகம் செய்வதற்கு டொனமூர் ஆணைக்குழு ஆர்வம் காட்டவில்லை. அப்போதைய இலங்கையின் சமூக – அரசியல் சூழமைவுகளும் மந்திரி சபை அரசாங்க முறைக்கு சாதகமாக இருக்கவில்லை என்பதனை டொனமூர் குழுவினர் உணர்ந்துக்கொண்டனர். அத்துடன் அரசியல் கட்சியொன்றினை உருவாக்குவதற்கான உடனடி வாய்ப்பும் அப்போது காணப்படவில்லை.
- அந்தவகையில் நிறைவேற்றுக்குழு முறை சுயாட்சிக்கான பயிற்சிக் கூடமாகவும் மக்கள் பிரதிநிதிகள் அனுபவத்தினைப் பெறுவதற்கான வாய்ப்பினையும் வழங்கும் என டொனமூர் ஆணைக்குழுவினர் குறிப்பிட்டனர். ஆகவே நிறைவேற்றுக்குழு முறை பொறுப்புக்கூறும் அரசாங்கம் தொடர்பான பயிற்சியினை உள்ளூர் அரசியல் தலைவர்களுக்கு வழங்குவதனை நோக்காகக் கொண்டமைந்தது.
- நிறைவேற்றுக்குழு முறை அரசியல்வாதிகளுக்கு மாத்திரமன்றி அரச அதிகாரிகளுக்கும் பொது நிர்வாகம் பற்றியும் அதன் தொழிற்பாடுகள் பற்றியும் அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கியது.
- மக்களின் பிரச்சினைகளை மற்றும் தேவைகளை அரசியல் அதிகாரத்துடன் இணைக்கின்ற ஒரு சிறந்த பொறிமுறையாக நிறைவேற்றுக்குழு முறை காணப்படும் என்ற நோக்கிலேயே டொனமூர் ஆணைக்குழவினர் நிறைவேற்றுக்குழு முறையினை தாபித்தனர்.
- கெபினட் அரசாங்க முறையொன்றினைத் தாபித்தால் அது சிறுபான்மையினம் பெரும்பான்மையினத்தின் ஆதிக்கத்துக்கு உட்படும் நிலைமையினை ஏற்படுத்தும். ஆகவே சிறுபான்மையின மக்களின் நலன்களை பாதுகாக்கும் வகையிலும் நிறைவேற்றுக்குழு முறையினை அறிமுகப்படுத்த டொனமூர் ஆணைக்குழு சிபாரிசு செய்தது.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- மேலும் பிரித்தானியாவிலும் அப்போது நிறைவேற்றுக்குழு முறைமை நடைமுறையில் காணப்பட்டமையால் இலங்கையில் அதனைப் பரீட்சித்துப்பார்ப்பது பிறிதொரு நோக்கமாக அமைந்தது.
- நிறைவேற்றுச் செயற்பாடுகளில் சிறுபான்மை மக்களை பங்குபெறச் செய்ய நிறைவேற்றுக்குழு முறையினை ஒரு வாய்ப்பாக பார்த்தமை.
- [illegible]
- [illegible]

**ii) நிறைவேற்றுக்குழு முறையின் செயற்பாடுகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் யாவை? (15 புள்ளிகள்)**

- டொனமூர் அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட நிறைவேற்றுக்குழு முறையின் செயற்பாடுகள் தொடர்பாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பொதுவில் அது வினைத்திறனற்றது, ஒருங்கிணைப்பு இல்லாது செயற்பட்டது, வினைத்திறன் மிக்க ஆளுகைக்குப் பொருத்தமற்றது போன்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதில் சிலவற்றை விரிவாக நோக்குவோம்.

- முதலாவதாக, நிறைவேற்றுக் குழு முறையின் கீழ் இடம்பெற்ற நிர்வாகம் சிக்கல் நிறைந்ததாகவும் காலதாமதமிக்கதாகவும் காணப்பட்டது. நிறைவேற்றுக் குழுக்களின் நிகழ்ச்சி நிரல்கள் எண்ணிலடங்கா விடயங்களைக் கொண்டு காணப்பட்டது. சிறிய மற்றும் அற்ப விடயங்களைக் கூட நீண்ட நேரம் செலவிட்டு விவாதித்தார்கள். இதன் விளைவாக சில முக்கியமான விடயங்களுக்கு அவசியமான உடனடி முன்னுரிமை வழங்கப்படவில்லை. தீர்மானம் எடுத்தல் மற்றும் அமுலாக்கம் என்பன முடிவற்ற கலந்துரையாடல்களினால் தொடர்ந்தும் தாமதப்படுத்தப்பட்டது. அதனால் தீர்மானம் எடுப்பது கடினமான காரியமாக காணப்பட்டது.

- இரண்டாவதாக, நிர்வாகத்தில் தீவிர ஒருங்கிணைப்பு பிரச்சினை காணப்பட்டது. இது ஒரு தனிமைப்படுத்தப்பட்ட நிர்வாக முறையாகக் காணப்பட்டது. தலைமைத்துவத்தினை வழங்கவோ அல்லது மேற்பார்வை செய்யவோ பிரதமரோ அல்லது தலைமை அமைச்சரோ காணப்படவில்லை. ஒவ்வொரு குழுவும் சுயாதீனமாக மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் செயற்பட்டன. திறமையான அமைச்சர்கள் சுய முயற்சிகள் ஊடாக குழவினை வழி நடாத்தி சென்றனர். ஆயினும் திறன் குன்றிய அமைச்சர்கள் குழவின் தீர்மானத்தில் தங்கியிருந்ததுடன், மெதுவாக செயற்பட்டனர். பல குழுக்களின் அமைச்சர்கள் தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்னிலைப்படுத்தி செயற்பட்டனர்.

- மூன்றாவதாக, நிறைவேற்றுக் குழுக்கள் இறுக்கமான வரம்புக்குள் இருந்துக் கொண்டு செயற்பட்டன. அபிவிருத்தி சார்ந்த மற்றும் ஏனைய முன்மொழிவுகளை கொண்டு வரும் போது ஏனைய குழுக்களுடன் கலந்துரையாடுவதில்லை. சில சமயங்களில் ஏனைய குழுக்களை பாதிக்கும் முன்மொழிவுகளையும் கொண்டுவந்தன. ஒவ்வொரு குழுவும் சுயாதீனத்தன்மையினை முன்னிறுத்தி செயற்பட்டமையினால் ஒத்துழைப்பு என்பது அடைய முடியாத ஒன்றாகக் காணப்பட்டது.

எந்த குழுவும் பொது நலனுக்காகத் தமது நலன்களை விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. நடைமுறையில், குழுக்களுக்கிடையில் பொதுவான தேசியக் கொள்கைகள் காணப்படவில்லை.

- இதன் விளைவாக ஏழு குழுக்களும் / அமைச்சர்களும் ஏழு வகையான கொள்கைகளை பின்பற்றின. ஒவ்வொன்றும் ஏனைய குழுக்கள் மீது ஏற்படும் பாதிப்பினை கருத்தில் கொள்ளாமல் தமது நோக்கங்களை முன்னிறுத்தி செயற்படுவதிலேயே ஆர்வம் காட்டின. சரியான ஒருங்கிணைப்பு இன்மையானது திட்டமிடப்படாத மற்றும் தலைகீழான அபிவிருத்திக்கு இட்டுச் சென்றது. இதனால் சில வேளைகளில் ஒரே விடயம் இரு நிர்வாகக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டது.

- இக்காலப்பகுதியில் சமூக நல சட்டங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களான பாதைகள், பாலங்கள், பாடசாலைகள் போன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை பொருளாதார அபிவிருத்திக்கான முழுமையான திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவில்லை.

- பிறிதொரு முக்கிய விமர்சனம் யாதெனில் கட்சி முறையொன்று காணப்படாமையாகும். நிறைவேற்றுக்குழு முறை கூட்டுப்பொறுப்புக்கு முன்னுரிமை வழங்காது தனிநபர்களுக்கு முன்னுரிமை வழங்கியதால் அரசியல் கட்சி முறையொன்றின் வளர்ச்சியினை பலவீனப்படுத்தியது என விமர்சிக்கப்பட்டது. நிறைவேற்று குழு உறுப்பினர்கள் முக்கியப்படுத்தப்பட்டதுடன், அவர்கள் தமது சொந்த தேர்தல் தொகுதிக்கு சேவை செய்வதில் மாத்திரமே அதிக அக்கறைக் காட்டினர். இந்த குறுகிய நோக்கமானது சமநிலையான அபிவிருத்தி மற்றும் தேசிய பொதுநலன் என்பவற்றினை பாதித்தது.

- சில குழுக்களின் கீழ் காணப்பட்ட திணைக்களங்களில் வேலை வாய்ப்பு வெற்றிடங்களை நிரப்பும் போது அரசியல் தலையீடு காணப்பட்டதாகவும் விமர்சிக்கப்படுகின்றது.

- முடிவாகப் பார்க்கும் போது, டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட விடயங்களில் பெரிதும் திருப்தியற்ற அம்சமாக நிறைவேற்றுக் குழு முறையினைக் கொண்ட அரசாங்க முறையினைக் குறிப்பிட முடியும். அதன் வினைத்திறனின்மை, போதிய தலைமைத்துமின்மை, மோசமான ஒருங்கிணைப்பு, தேசிய திட்டமிடல் இன்மை, கட்சி அரசியலை பலவீனப்படுத்தியமை என்பன வினைத்திறன் மிக்க ஆட்சிக்கு நிறைவேற்றுக்குழு முறையினை பொருத்தமற்றதாக்கியது. இப் பின்புலத்திலேயே புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கான பரிந்துரை வழங்கப்பட்டது.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**06. இலங்கையின் 1947/ 48 சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் மக்கள் பிரதிநிதிகள் சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அரசு பேரவையுடன் ஒப்பிடுக. (20 புள்ளிகள்)**

சோல்பரி அரசியலமைப்பு (1947/ 1948) மற்றும் முதலாம் குடியரசு அரசியலமைப்பு (1972) ஆகியன இரண்டு வேறுபட்ட சட்டத்துறைகளை ஸ்தாபித்தன. சோல்பரி அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றத்தின் முதலாம் மன்றமாக மக்கள் பிரதிநிதிகள் சபை காணப்பட்டது. மறுபுறமாக 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு தேசிய அரசு பேரவை என்ற பெயரில் ஓரங்க சட்ட சபையினை ஸ்தாபித்தது. இவற்றினுடைய அதிகாரங்கள் மற்றும் கட்டமைகள் முக்கிய வேறுபாடுகளை கொண்டிருந்தன.

1947 /1948 ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின் கீழ் மக்கள் பிரதிநிதிகள் சபை நாட்டின் அமைதி, சட்ட ஒழுங்கு, நல்லாட்சிக்காக சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தினைக் கொண்டிருந்தது. ஆயினும் மக்கள் பிரதிநிதிகள் சபை தமது சட்டவாக்க அதிகாரத்தினை அரசியலமைப்பு வரம்புகளுக்கு உட்பட்டே பிரயோகிக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

குறிப்பாக அரசியலமைப்பின் பிரிவு 29(4)க்கு இணங்க பாராளுமன்றம் அரசியலமைப்பினை திருத்த, அல்லது அரசியல் அமைப்பின் ஏதேனும் ஒரு பகுதியினை நீக்க அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும் அரசியலமைப்பினை திருத்துகின்ற அல்லது நீக்குகின்ற சட்ட மசோதாவானது மக்கள் பிரதிநிதிகள் சபையின் மொத்த உறுப்பினர்களின் குறைந்தது 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

அத்தகைய சட்ட மசோதா ஒன்றினை சபாநாயகர் சான்றுப்படுத்தி பிரித்தானிய முடியின் சம்மதத்திற்காக அனுப்பி வைக்க வேண்டும். அதில் சபாநாயகர் அரசியலமைப்பு திருத்தத்திற்கு அவசியமான பெரும்பான்மை பாராளுமன்றத்தில் கிடைக்கப் பெற்றமையையும் உறுதிப்படுத்த வேண்டும். இச்செயன்முறை பின்பற்றப்படாவிட்டால் நீதிமன்றம் குறித்த சட்டத்தினை வலிதற்றது என பிரகடனம் செய்யும்.

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் மக்கள் பிரதிநிதிகள் சபையின் சட்டவாக்க அதிகாரத்தினை கட்டுப்படுத்திய பிறிதொரு ஏற்பாடும் காணப்பட்டது. அது அரசியலமைப்பின் 29 (2) ஆம் பிரிவாகும். இவ்வேற்பாடானது பாகுபாடான கவனிப்புகளில் இருந்து சிறுபான்மை இனத்தவர்களையும், மத நிறுவனங்களையும் பாதுகாப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வேற்பாட்டுடன் அல்லது பிரிவுடன் முரண்படும் சட்டங்களை வலிதற்றதாக்கும் அல்லது வெற்றுக்காகிதமாக்கும் அதிகாரத்தினை நீதிமன்றம் கொண்டிருந்தது.

ஆயினும் முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அரசு பேரவையானது தடைகளற்ற சட்டவாக்க அதிகாரத்தினை கொண்டிருந்தது. அது அரச அதிகாரத்தின் மீயுயர் கருவியாக காணப்பட்டது. சோல்பரி அரசியலமைப்பின் கீழ் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு காணப்பட்ட பிறிதொரு கட்டுப்பாடு யாதெனில் நீதிப்புனராய்வு அதிகாரம் ஆகும். சோல்பரி அரசியலமைப்பின் கீழ் சாதாரண நீதிமன்றங்களுக்கு இவ் அதிகாரம் காணப்பட்டது. அரசியலமைப்பின் 19 ஆவது பிரிவில் இது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்தது. இது சட்டவாக்க அதிகாரத்தினைக் கட்டுப்படுத்தியது. ஆயினும் சட்டத்தினை வலிதற்றதாக்கும் அதிகாரம் அரசியலமைப்பு ரீதியாக நீதிமன்றங்களுக்கு வழங்கப்படவில்லை.

1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு நீதிமன்றங்களுக்கு நீதிப்புனராய்வு அதிகாரத்தினை வழங்கவில்லை. தேசிய அரசு பேரவையினால் உருவாக்கப்படும் சட்டங்களை எந்த ஒரு நீதிமன்றத்தினாலும் கேள்விக்குட்படுத்த முடியாது. மக்கள் பிரதிநிதிகள் சபையினை போன்று தேசிய அரசு பேரவை எந்தவொரு வெளி அதிகார சக்திகளுக்கும் கீழ்ப்பட்டதாக காணப்படவில்லை.

மக்கள் பிரதிநிதிகள் சபை மற்றும் தேசிய அரசு பேரவை ஆகியன பொது நிதி தொடர்பான முழுமையான அதிகாரங்களைக் கொண்டிருந்தன. நிதி தொடர்பான சட்ட மசோதாக்களை கொண்டுவரும் அதிகாரம் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு மாத்திரமே காணப்பட்டதுடன், அது வரி அறவிடல் மற்றும் அரசாங்கத்தின் செலவு தொடர்பான விடயங்களில் ஜனநாயக கட்டுப்பாட்டினை கொண்டிருந்தது. அதேபோல் தேசிய அரசு பேரவையும் பொது நிதி தொடர்பான விடயங்களில் முழுமையான கட்டுப்பாட்டினைக் கொண்டிருந்தது.

மேலே குறிப்பிட்ட அதிகாரங்களுக்கு அப்பால் மக்கள் பிரதிநிதிகள் சபை மற்றும் தேசிய அரசு பேரவை என்பன ஜனநாயக நாடுகளில் சட்டத்துறை ஆற்றுகின்ற பல பொதுவான பணிகளையும் நிறைவேற்றின. அந்தவகையில் சட்டங்களை உருவாக்குதல், நிறைவேற்றுத்துறை மீதான கண்காணிப்பு மற்றும் மக்களின் நலன்களை பிரதிநிதித்துவம் செய்தல் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

**குறிப்பு : பரீட்சார்த்திகள் தமது விடையில் இவ்விரு நிறுவனங்களினதும் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் பற்றிய விடயங்களுக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்கியிருக்க வேண்டும்.**

**07. (i). இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் நீதிமன்றம் கொண்டுள்ள நியாயாதிக்கங்களில் (அதிகாரங்கள்) எவையேனும் ஐந்தினை குறிப்பிடுக. (05 புள்ளிகள்)**

தற்போதைய அரசியலமைப்பின் கீழ் உயர்நீதிமன்றமானது பல முக்கிய நியாயாதிக்கங்களை (அதிகாரங்களை) கொண்டுள்ளது. அவற்றில் பிரதான ஏழு அதிகாரங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

**1. அரசியலமைப்புக்கு வியாக்கியானம் வழங்குதல் : (உறுப்புரை 125)**

உயர்நீதிமன்றம் அரசியலமைப்புக்கு வியாக்கியானம் வழங்கும் தனி முதன்மை அதிகாரத்தினை கொண்டுள்ளது. அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாடுகள் தொடர்பாக பிரச்சனைகள் ஏற்படும் பொழுது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானதும், கட்டுப்பட வேண்டியதுமான தீர்ப்பாக அமையும்.

**2. அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் : (உறுப்புரை 126)**

நிறைவேற்றுத்துறை அல்லது நிர்வாக நடவடிக்கைகளினால் பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் மீறல்களுடன் தொடர்புடைய வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு உண்டு.

**3. ஆலோசனை வழங்கும் அதிகாரம் : (உறுப்புரை 129)**

ஜனாதிபதி ஏதேனும் சட்டம் மற்றும் அரசியலமைப்பு சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வினை தேட உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையினை அல்லது அபிப்பிராயத்தினை பெற்றுக்கொள்ள முடியும். அதன்படி உயர்நீதிமன்றம் ஜனாதிபதிக்கு ஆலோசனையினை அல்லது அபிப்பிராயத்தினை வழங்கும். அது ஜனாதிபதி நாட்டின் அரசியலமைப்பு ஆளுகையினை கொண்டு நடத்துவதற்கு துணைபுரியும்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**4. சட்ட மசோதாக்களின் அரசியலமைப்பு தன்மையினை பரிசீலனை செய்தல் : (உறுப்புரை 120 - 123)**

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற சட்ட மசோதாக்கள் அரசியலமைப்பு ஏற்பாடுகளுடன் ஒத்துநிற்கின்றதா, இல்லையா என்பதனை பரிசீலனை செய்யும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு உண்டு. இது அரசியலமைப்பு ஏற்பாடுகளை மீறி சட்டங்கள் உருவாக்கப்படுவதனை தடுக்கின்றது.

**5. ஜனாதிபதி தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் : (உறுப்புரை 130)**

ஜனாதிபதி தேர்தலை சவாலுக்கு உட்படுத்தும் (தேர்தல் முடிவுகள், தேர்தலை பிற்போடல்) வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தினை உயர்நீதிமன்றம் கொண்டுள்ளது. அதனுடைய தீர்ப்பு இறுதியானதும், முடிவானதுமாக அமையும்.

**6. மக்கள் தீர்ப்பு தொடர்பான அதிகாரம் : (உறுப்புரை 130A)**

மக்கள் தீர்ப்பு ஒன்றின் உறுதித் தன்மை, அது மேற்கொள்ளப்பட்ட விதம் மற்றும் அதன் முடிவுகளை சவாலுக்கு உட்படுத்தும் வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தினை உயர்நீதிமன்றம் கொண்டுள்ளது.

**7. இறுதியானதும் மேலானதுமான அரசியலமைப்பு சார்ந்த அதிகாரம் : (உறுப்புரை 118 - 125)**

நாட்டின் உச்சநீதிமன்றம் என்ற வகையில் அரசியலமைப்பு தொடர்பான இறுதி தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தினை உயர்நீதிமன்றம் பிரயோகிக்கின்றது. அது அரசியலமைப்பின் மேலாண்மை மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஒருமுகப்படுத்தப்பட்ட பிரயோகம் என்பவற்றினை உறுதி செய்கின்றது.

**குறிப்பு : பரீட்சார்த்திகள் ஏதேனும் ஐந்து அதிகாரங்களைக் குறிப்பிட்டு இருந்தால் 05 புள்ளிகளை வழங்கவும்.**

**7. (ii) "இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு நீதித்துறை சுதந்திரத்தினை போதியளவு உறுதி செய்துள்ளது" இக்கூற்றினை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்க. (15 புள்ளிகள்)**

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு நீதித்துறை சுதந்திரத்தினை வெளிப்படையாக அங்கீகரித்துள்ளது. அந்தவகையில் அரசியலமைப்பு நீதித்துறை சுதந்திரத்துக்கான சில ஏற்பாடுகளை கொண்டுள்ளது. குறிப்பாக உறுப்புரை 107 மற்றும் ஏனைய சில ஏற்பாடுகள் நீதித்துறையானது நிறைவேற்று மற்றும் சட்டத்துறையில் இருந்து வேறுபட்ட சுயாதீன நிறுவனம் என்பதனை உறுதி செய்கின்றன.

தற்போதைய அரசியலமைப்பின்படி உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகள் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகிறார்கள். இது நீதித்துறை சார்ந்த உயர் நியமனங்களில் நிறைவேற்றுத்துறையின் தலையிட்டினை குறைக்கின்றது. அரசியலமைப்பு பேரவையும் நீதித்துறையின் உயர் நியமனங்களில் அரசியல் தலையீட்டைக் கட்டுப்படுத்துகின்றது.

நீதித்துறை சுதந்திரத்தினை பாதுகாப்பதில் செல்வாக்கு செலுத்தும் பிறிதொரு காரணி யாதெனில் நீதிபதிகளின் பதவி பாதுகாப்பாகும்.

அந்த வகையில் அரசியலமைப்பின் உறுப்புரை 107(1) இற்கு இணங்க உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 65 ஆகும். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 63 ஆகும். ஆகவே உயர்நீதிமன்றத்தினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகள் ஓய்வு பெறும் வயதினை அடையும் வரை பதவியில் இருக்க முடியும். அவர்களை பதவி நீக்குகின்ற அதிகாரம் பாராளுமன்றத்துக்கு மாத்திரமே உண்டு.

தவறான நடத்தை மற்றும் இயலாமை போன்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பதவி நீக்க முடியும். அதேபோன்று மேல் நீதிமன்ற மற்றும் கீழ் நீதிமன்றங்களில் பணியாற்றும் நீதிபதிகளுக்கும், தன்னிச்சையான பணி நீக்கத்திலிருந்து பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு, திரட்டு நிதியிலிருந்து வழங்கப்படுகின்றது. மேலும் நீதிபதிகளின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்துக்கான உரிமைகள் என்பன பாதுகாக்கப்பட வேண்டும். அவை நீதிபதிகளின் பதவிக்காலத்தில் குறைக்கப்படக்கூடாது. உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் அரசியலமைப்பில் அனுமதிக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகளைத் தவிர, வேறு எந்த பதவிகளையோ அல்லது இலாபம் தரும் தொழில்களிலோ ஈடுபட முடியாது.

அரசியலமைப்பின் IIIஆவது உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட நீதிச்சேவை ஆணைக்குழு நீதித்துறை சுதந்திரத்தினைப் பேணிப் பாதுகாப்பதில் முக்கிய பங்கினை ஆற்றுகின்றது. கீழ்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்கின்ற அதிகாரத்தினை நீதிச்சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. அதனூடாக அரசியல் நிறைவேற்றத் துறையின் தலையீட்டில் இருந்து நீதித்துறை பாதுகாக்கப்பட்டுள்ளதுடன், நிர்வாக சுயாதீன தன்மையும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறியவாறு தற்போதைய அரசியல் அமைப்பில் நீதித்துறை சுதந்திரத்தினை உறுதி செய்வதற்கு போதுமான ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும், நடைமுறையில் நீதித்துறை சுதந்திரத்தின் மீதான பாரிய அச்சுறுத்தலாக அரசியல் நிறைவேற்றுத்துறை காணப்படுகின்றது. குறிப்பாக 18ஆவது மற்றும் 20ஆவது அரசியலமைப்பு திருத்தங்கள் நீதித்துறை நியமன விடயங்களில் ஜனாதிபதிக்கு அதிகாரங்களை வழங்கியதுடன், நீதித்துறை சுதந்திரத்தினையும் மழுங்கடித்தது. 21வது அரசியலமைப்பு திருத்தம் அரசியலமைப்பு பேரவையினை மீள அறிமுகம் செய்திருந்தாலும், நீதித்துறை நியமன விடயங்களில் ஜனாதிபதிக்கு இன்னும் குறிப்பிடத்தக்க அதிகாரங்கள் காணப்படுகின்றன.

நீதித்துறை சுதந்திரம் பற்றி ஆராய்கின்றபோது கவனம் செலுத்தப்பட வேண்டிய பிறிதொரு முக்கியமான விடயம் நீதிபதிகளை பதவி நீக்கும் செயன்முறையாகும். நீதிபதிகளை பதவி நீக்க குற்றப்பிரேரனைகளை கொண்டு வரும்போது அது நியாயமானதாக மற்றும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி நீக்கல் ஏற்பாடுகளுக்கு அமைய இடம்பெற வேண்டும். எவ்வாறாயினும் 2013 ஆம் ஆண்டு அப்போதைய பிரதம நீதியரசராகக் காணப்பட்ட சிராணி பண்டாரநாயக்க அவர்களை பதவி நீக்குவதற்கு கொண்டுவரப்பட்ட குற்றப்பிரேரணையானது பாராளுமன்றத்தில் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு காணப்படும் அரசியல் ஆதிக்கம் எவ்வாறு நீதித்துறையின் மீது அழுத்தத்தை பிரயோகிக்க முடியும் என்பதனை தெளிவாக எடுத்துக் காட்டியது.

அத்தகைய நடைமுறைகள் நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையினை இல்லாது செய்ததுடன், நிறுவன பலவீனத்தினையும் எடுத்துக்காட்டியது.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

சில சந்தர்ப்பங்களில் இலங்கையில் உயர் நீதிமன்றம் அடிப்படை உரிமை மீறல்கள் மற்றும் அரசியலமைப்பு சார்ந்த வழக்குகளில் மிகச் சிறந்த தீர்ப்புகளை வழங்கியுள்ளது. உதாரணமாக 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசியல் சூழ்ச்சியின் போது உயர் நீதிமன்றம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் தீர்மானத்தை வலிதற்றதாக்கி அரசியலமைப்பினை பாதுகாத்தது. அதே போன்று 2022ஆம் ஆண்டிற்கு பின்னர் அரசியல் தலையீடுகளை கருத்தில் கொள்ளாது பல முக்கிய தீர்ப்புகளை வழங்கியுள்ளது. பின்வருவனவற்றினை உதாரணமாக குறிப்பிடலாம்.

- ✓ 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்ரமசிங்க அவர்கள் நாட்டில் அவசரகால நிலைமையினை பிரகடனப்படுத்தியமையினை சட்டத்திற்கு புறம்பானது என தீர்ப்பளித்தது.
- 2024 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சை பெறுபேறுகளை மீள திருத்துமாறு தீர்ப்பளித்தது.
- 2024 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபை தேர்தல்களை ரணில் விக்ரமசிங்க நடத்தாமையினை சட்டத்துக்கு புறம்பானது என தீர்ப்பளித்தது.
- ✓ 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை தள்ளுபடி செய்தமை.
- ✓ 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கோட்டபாய ராஜபக்ச மற்றும் அவரின் சகோதரர்கள் உள்ளிட்ட 13 பேர் நாட்டின் பொருளாதார வங்குரோத்து நிலைமைக்கு பொறுப்புக் கூற வேண்டும் என தீர்ப்பளித்தமை.

நாட்டில் 2024 ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் பின்னர் நீதித்துறை சுதந்திரம் மேம்பட்டு இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய விடயங்கள் நீதித்துறை தொடர்பான நம்பிக்கையினை எடுத்துக்காட்டினாலும், நீதித்துறை கட்டமைப்பில் காணப்படுகின்ற அடிப்படைப் பிரச்சினைகள் தொடரவே செய்கின்றன. ஆகவே நீதித்துறை சுதந்திரத்தினை மேலும் சக்திப்படுத்துவதற்கு அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அவசியமாகும்.

**குறிப்பு: பரீட்சார்த்திகள் நீதித்துறைச் சுதந்திரம் தொடர்பான விடயங்களை, நடைமுறை உதாரணங்களுடன் தொடர்புபடுத்தி எழுதியிருப்பின் முழுமையான புள்ளிகளை வழங்கவும்**

8. பின்வருவனவற்றில் ஏதாவது இரண்டினைச் சுருக்கமாக கலந்துரையாடுக.

I. ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பின் முக்கியமான அம்சங்கள் (10 புள்ளிகள்)

**நோக்கம்:**

இவ்வினாவானது பரீட்சார்த்திகளின் ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்கள் தொடர்பான அறிவு மற்றும் புரிதலை மதிப்பீடு செய்வதனை இலக்காகக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் அமெரிக்க அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களை விபரிக்க வேண்டும். ஆசிரியர் வழிகாட்டியில் 12 குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. எனவே, பரீட்சார்த்திகள் ஆகக்குறைந்தது 05 அல்லது 06 குறிப்புக்களை எழுதி விளக்கியிருப்பின் முழுமையான புள்ளிகளை வழங்கவும். எனினும், பரீட்சார்த்திகள் வெறுமனே 05 அல்லது 06 குறிப்புக்களை மாத்திரம் குறிப்பிட்டிருப்பின், முழுமையான புள்ளிகளை வழங்குவதில்லை என்பதனை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும். இருப்பினும், ஒரு பரீட்சார்த்தி 10 இற்கும் மேற்பட்ட குறிப்புக்களை எழுதியிருந்தால், விளக்கம் எழுதத் தவறியிருப்பினும் முழுமையான புள்ளிகளை வழங்கவும்.

அறிமுகத்திற்கும் முடிவுரைக்கும் தலா 1 புள்ளி வீதம் வழங்கவும். நீங்கள் மதிப்பீட்டின் போது அறிமுகம் மற்றும் முடிவுரை இல்லாது, வினாவிற்கு சிறந்த விடை எழுதப்பட்டிருப்பதனை காண்பீர்களாயின், அவ்வினாவின் உள்ளடக்கத்திற்கு முழுமையான புள்ளிகளை வழங்க வேண்டப்படுகின்றீர்கள். விடையில் அறிமுகம் மற்றும் முடிவுரை எழுதப்படவில்லை எனும் காரணத்திற்காக, புள்ளிகளை வழங்காது பரீட்சார்த்திகளை பாராபட்சத்திற்கு உட்படுத்தலாகாது.

**அமெரிக்க அரசியலமைப்பின் முக்கியமான அம்சங்கள் :**

- அமெரிக்கா மிகப் பழமையான எழுதப்பட்ட அரசியலமைப்பைக் கொண்டுள்ளது. ஒரு எழுதப்பட்ட அரசியலமைப்பு என்பது நவீன அரசாங்கத்தின் அடிப்படை அம்சமாகும். அதிலும் குறிப்பாக, சமஷ்டி முறைமையில் இது ஒரு முக்கியமான பண்பாகும். அமெரிக்க அரசியலமைப்பு ஒப்பீட்டளவில் ஒரு சுருக்கமான ஆவணமாகும். இது காங்கிரஸால் இயற்றப்பட்ட சட்டங்கள், மரபுகள் மற்றும் நீதித்துறை தீர்மானங்களால் வளப்படுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பில் 27 திருத்தங்கள் உள்ளன. இது ஒரு முன்னுரையையும், 4000 சொற்களையும், 7 கட்டுரைகளையும், 10 முதல் 12 பக்கங்கள் வரை அரை மணி நேரத்திற்குள் வாசித்து முடிக்கக் கூடிய அளவையும் கொண்டுள்ளது.
- மரபுகள் மற்றும் நடைமுறைகள்: அரசியலமைப்பை நிறுவியவர்கள் பொதுவான கட்டமைப்பை மட்டுமே வழங்கியுள்ளனர். மரபுகள் மற்றும் அரசியலமைப்பு நடைமுறைகளால் இதற்கான இரத்தமும் சதையும் வழங்கப்பட்டுள்ளது.
- கடினத்தன்மை: அமெரிக்க அரசியலமைப்பு ஒப்பீட்டளவில் இறுக்கமான அரசியலமைப்பாகும். அதை மாற்றுவது அல்லது ஒழிப்பது கடினமானதாகும். அரசியலமைப்பு திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின், ஒரு கடினமான செயன்முறையை நிறைவேற்ற வேண்டும். எந்தவொரு திருத்தத்திற்கும் காங்கிரஸ் இரு அவைகளின் மூன்றில் இரண்டு பங்கு (2/3) பெரும்பான்மை ஆதரவும், மூன்றில் இரண்டு பங்கு (2/3) மாநில அரசாங்கங்களின் ஒப்புதலும் தேவை.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- கூட்டாட்சி: அமெரிக்க கூட்டாட்சி அரசு ஆரம்பத்தில் 13 சுயாதீன அரசாங்கங்களால் உருவான, ஒரு தோல்வியடைந்த கூட்டமைப்பை உருவாக்கியிருந்தன. ஆனால், தற்போது அது 50 மாநிலங்களைக் கொண்டுள்ளது.
- அரசியலமைப்பின் மீயுயர் தன்மை: அமெரிக்காவில் அரசியலமைப்பே உயர்ந்ததாகும். இது கூட்டாட்சி அமைப்பின் ஒரு முக்கிய அம்சமாகும்.
- அதிகாரப் பிரிவினை: அமெரிக்க அரசியலமைப்பு அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினை உள்ளடக்கியுள்ளது. மேலும், இது தடைகள் மற்றும் சமநிலை முறையையும் கொண்டுள்ளது. தன்னிச்சையான அரசாங்கத்தைத் தடுப்பதே இந்த இரண்டு அரசியலமைப்பு பொறிமுறைகளின் நோக்கமாகும்.
- உரிமைகள் மசோதா: அமெரிக்க அரசியலமைப்பிலும் உரிமைகள் மசோதா உள்ளடக்கப்பட்டுள்ளது. குடிமக்களின் அடிப்படை உரிமைகள், சுதந்திரம் மற்றும் சொத்துக்களைச் சட்டத்தின் ஆட்சிக்குள் பாதுகாப்பதே உரிமைகள் மசோதாவின் நோக்கமாகும்.
- நீதித்துறை மீளாய்வு: அரசியலமைப்பிற்கு வியாக்கியானம் அளிப்பதன் மூலம் அமெரிக்க நீதித்துறை இந்த அதிகாரத்தைப் பெற்றுள்ளது. அமெரிக்க உச்ச நீதிமன்றம் வில்லியம் மார்பரி எதிர் ஜேம்ஸ் மெடிசன் (Marbury Vs. Madison, 1803) எனும் பிரபலமான வழக்கில், அரசியலமைப்பு காங்கிரஸால் இயற்றப்பட்ட சட்டங்களை மீளாய்வு செய்ய நீதிமன்றங்களுக்கு வெளிப்படையாக அனுமதி வழங்கவில்லை என்றாலும், அந்த அதிகாரம் அரசியலமைப்பில் மறைமுகமாக உள்ளது என்று தனது தீர்ப்பில் அறிவித்தது.
- மக்கள் இறையாண்மை: அமெரிக்க அரசியலமைப்பு மக்கள் இறையாண்மை என்ற குடியரசுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. இதன் பொருள் அரசாங்கம் அதன் அதிகாரத்தை இறையாண்மை கொண்ட மக்களிடமிருந்து பெறுகின்றது என்பதாகும்.
- குடியரசுவாதம்: அமெரிக்கா ஒரு குடியரசு. அதன் அரசின் தலைவர் ஜனாதிபதி ஆவார். அரசியலமைப்பு அதன் அதிகாரங்களை மக்களிடமிருந்து பெறுகிறது. மாநிலங்களும் குடியரசு மாதிரியின் படி வடிவமைக்கப்பட்ட அரசியலமைப்புகளைக் கொண்டுள்ளன.
- அமெரிக்க அரசாங்கம் ஒரு ஜனாதிபதித்துவ ஆட்சிமுறையைக் கொண்ட அரசாங்கமாகும்.
- இரட்டைக் குடியுரிமை: அமெரிக்கக் குடிமக்கள் மத்திய ~~அரசாங்கத்திலும்~~ (ஐக்கிய அமெரிக்கா) மாநில ~~அரசாங்கத்திலும்~~ குடியுரிமையைப் பெற்றுள்ளனர்.

**பரீட்சார்த்திகள் பின்வரும் விடயங்களையும் கலந்துரையாடலாம்:**

- அமெரிக்கா ஒரு மதச்சார்பற்ற நாடு. அனைத்து மதங்களின் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மதச்சார்பற்ற அரசை நிறுவுகிறது. அதன் குடிமக்களுக்கு மத சுதந்திரத்தை வழங்குவதுடன், மேலும் அரசு மதத்தின் அடிப்படையில் குடிமக்களிடையே எந்த பாகுபாட்டையும் காட்டுவதில்லை.
- பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் போன்ற இரு அவைகளைக் கொண்ட சட்டமன்றம். செனட் உலகின் மிகவும் சக்தி வாய்ந்த இரண்டாவது அவையாகக் கருதப்படுகிறது.
- அதிகாரப் பிரிவினை, தடைகள் மற்றும் சமன்பாடுகள் கொண்ட வரையறுக்கப்பட்ட அரசாங்கம்.

**II.** **ஐக்கிய இராச்சியத்தில் ஒற்றையாட்சி அரசாங்க முறையின் மாறிவரும் தன்மை. (10 புள்ளிகள்)**
**நோக்கம்:**

- பிரித்தானிய ஒற்றையாட்சி அரசியலமைப்பு மாதிரியில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால மாற்றங்கள் குறித்த பரீட்சார்த்திகளின் அறிவை மதிப்பிடுவதே இவ்வினாவின் நோக்கமாகும்.

**விடையின் பிரதானமான குறிப்புக்கள்:**

- பிரித்தானிய ஒற்றையாட்சி அமைப்பில் ஏற்பட்ட அண்மைக்கால மாற்றங்களுக்கான பின்னணி.
- பிரித்தானிய ஒற்றையாட்சி அமைப்பு தற்போது எவ்வாறு மாறியுள்ளது என்பதனைக் காட்டுதல்.
- அண்மைக்கால மாற்றங்களின் தன்மையை விளக்குதல்.

**உள்ளடக்கம்:** பரீட்சார்த்தி பின்வரும் வகையில் ஒரு அறிமுகத்தை வழங்கலாம்.

பிரித்தானிய அரசியலமைப்பு முறை பல நூற்றாண்டுகளாக ஒற்றையாட்சி அரசியலமைப்புகளின் முதன்மை மாதிரியாக இருந்து வருகிறது.

பிரித்தானிய அரசியலமைப்பு எழுதப்பட்ட அரசியலமைப்பாக இருக்கவில்லை. ஆனால் அது சில எழுதப்பட்ட சட்டங்கள், மரபுகள், பழக்கவழக்கங்கள் மற்றும் மாக்னா காட்டா (the Magna Carta) மற்றும் தீர்வுச் சாசனம் (The Act of Settlement, 1701) போன்ற சில முக்கிய ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியலமைப்பாகும்.

பிரித்தானிய அரசியலமைப்பின் அண்மைக்கால போக்கு, பிரித்தானிய பாரம்பரிய ஒற்றையாட்சி மாதிரியிலிருந்து விலகிச் செல்கிறது. இந்த மாற்றத்தில் 1998 இல் ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்துக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தமை முக்கியமான திருப்புமுனையைக் குறிக்கின்றது.

**பின்னணி :** ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸில் பிராந்திய சுயாட்சியைக் கோரும் தேசியவாத இயக்கங்களுடன், ஐரிஷ் பிரிவினைவாதப் போராட்டமும் பிரித்தானியாவில் நீண்டகாலமாக நிலவியிருந்தது. இந்த ஐரிஷ், ஸ்கொட்டிஷ் மற்றும் வேல்ஸ் தேசியவாத இயக்கங்களின் தீவிரத்தன்மையினால், மேற்கண்ட மூன்று மாகாணங்களுக்கும் அதிகாரப் பகிர்வை ஏற்படுத்த பிரித்தானிய ஒற்றையாட்சி மாதிரியை மாற்ற வேண்டியிருந்தது. இதனால், 1998 முதல் பிரித்தானியா அதிகாரப் பகிர்வு முறையைக் அறிமுகப்படுத்தியது.

ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து மற்றும் வேல்ஸுக்கு அதிகாரப் பகிர்வு பின்வரும் பாராளுமன்றச் சட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

a. 1998 ஆம் ஆண்டின் ஸ்கொட்லாந்து சட்டம்

b. 1998 ஆம் ஆண்டின் வேல்ஸ் அரசாங்கச் சட்டம்

c. 1998 ஆம் ஆண்டின் வட அயர்லாந்து சட்டம்



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

பிரித்தானிய ஒற்றையாட்சி மாதிரியை மாற்றியமைத்ததற்கு பிராந்திய தேசியவாதத்தின் எழுச்சியே முக்கிய காரணமாகும். 1970களில் இருந்து பிரித்தானியா ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றால், பிரித்தானியாவில் அதிகாரப் பகிர்வு அவசியம் என்பது பரவலாக உணரப்படலாயிற்று. வட அயர்லாந்தில் போர் தீவிரமடைந்ததும், ஸ்கொட்லாந்தில் சுதந்திர இயக்கமும் அதிகாரப் பகிர்விற்கான வாதத்தை மேலும் வலுப்படுத்தியது. இதேவேளை, தொழிற்கட்சியும் அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவாக வாதிட்டது. இந்தப்பின்னணியில், 1990களின் நடுப்பகுதியில், ஆளும் கென்சர்வேடிவ் கட்சியும் பிரித்தானிய ஒற்றையாட்சி அரசின் நெருக்கடிக்கு ஒரு தீர்வாக அதிகாரப் பகிர்வுடன் உடன்படலாயிற்று.

இதனால், பிரித்தானிய அரசாங்க முறையை ஒற்றையாட்சி மாதிரியிலிருந்து அதிகாரப் பகிர்வு கொண்ட பிராந்திய சுயாட்சியாக மாற்றுவதற்கு அனைத்துக் கட்சிகளின் ஒருமித்த கருத்தும் ஏற்பட்டது.

ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து மற்றும் வேல்ஸ் ஆகிய மூன்று ~~மாகாணங்களுக்கும்~~ வழங்கப்பட்ட சுயாட்சியின் அளவைப் பொறுத்தவரை அதிகாரப் பகிர்வு ஒரே மாதிரியாக இல்லை. இது சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு முறையாகும். வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்தை விட, ஸ்கொட்லாந்து அதிக பகிரப்பட்ட அதிகாரங்களைக் (More devolved powers) கொண்டுள்ளது.

**குறிப்பு:** பரீட்சார்த்திகள் இந்த மூன்று ~~மாகாணங்களின்~~ அதிகாரங்களைப் பற்றி எழுதியிருந்தால், புள்ளிகள் வழங்கவும்.

பிரித்தானிய அதிகாரப் பகிர்வு முறையில், மத்திய பாராளுமன்றம் பாதுகாப்பு, குடியேற்றம், வெளியுறவுக் கொள்கை, வேலைவாய்ப்பு, ஒளிபரப்பு, வர்த்தகம் மற்றும் கைத்தொழில், அணுசக்தி மற்றும் மின்சாரம், நுகர்வோர் உரிமைகள், தரவுப் பாதுகாப்பு மற்றும் அரசியலமைப்பு போன்ற முக்கியமான விடயங்களைத் தக்க வைத்துக் கொள்கிறது. மத்திய அரசின் இந்த அதிகாரங்கள் 'ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் (Reserved powers)' என்றும், மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள் 'மாற்றப்பட்ட அதிகாரங்கள் (Transferred powers)' என்றும் அழைக்கப்படுகின்றன.

இன்றைய பிரித்தானிய அரசியலமைப்பு முற்றிலும் ஒற்றையாட்சி முறை அல்ல. கூட்டாட்சி முறையும் அல்ல. இது ஒரு பரந்த ஒற்றையாட்சி அரசுக்குள் அதிகாரப் பகிர்வுக்கு இடமளிக்கும் ஒரு அமைப்பாகும். எனவே, இன்று பிரித்தானிய அரசியலமைப்பை ஒரு கலப்பு அரசியலமைப்பு என்று விபரிக்கலாம். இத்தகைய மாற்றம், அதன் பாரம்பரிய ஒற்றையாட்சி அரசியலமைப்பு மாதிரியிலிருந்து ஏற்பட்டதொரு பெரிய விலகலாகும். எனவே, இனிமேல் பிரித்தானிய அரசியலமைப்பு ஒற்றையாட்சி அமைப்பின் முதன்மை மாதிரி என்பதனைப் பிரதிபலிக்கவில்லை. இது,

(அ) பிரித்தானிய சமூகத்தின் இன மற்றும் கலாச்சார பன்முகத்தன்மை மற்றும்

(ஆ) அந்த இன பன்மைத்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் ஒற்றையாட்சி அரசை சீர்திருத்த வேண்டியதன் அவசியத்தையும் அங்கீகரிக்கிறது.

ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்திற்கான அதிகாரப் பகிர்வு இங்கிலாந்தின் ஒற்றுமையையோ அல்லது வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றத்தின் இறையாண்மையையோ பாதிக்காது. இருப்பினும் அரசியல் யதார்த்தங்கள் இங்கிலாந்தில் அரைகுறை சமஸ்டி முறையின் வளர்ச்சி நடைபெறுவதாகக் கூறத் தொடங்கியுள்ளன.

## III. சுவிஸ் கன்டன்களின் சுயாட்சி அதிகாரங்கள் (10 புள்ளிகள்)

**நோக்கம்:**

இவ்வினா பரீட்சார்த்திகளின் சுவிஸ் கன்டன்களின் சுயாட்சி அதிகாரங்களைப் பற்றிய புரிதலை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆசிரியர் வழிகாட்டியில் ஏழு குறிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே பரீட்சார்த்திகள் முழு மதிப்பெண்களைப் பெற, குறைந்தபட்சம் 5 குறிப்புக்களையேனும் விளக்க வேண்டும். பரீட்சார்த்திகள் முழு மதிப்பெண்களைப் பெறுவதற்காக, விடைகளை மிகச் சுருக்கமாகவேனும் விளக்க வேண்டும். எனினும், சில பரீட்சார்த்திகள் விடைக்குறிப்புக்களை மாத்திரம் குறிப்பிட்டிருப்பின், அவற்றிற்கு முழு மதிப்பெண்கள் வழங்கப்படக்கூடாது.

அறிமுகம் மற்றும் முடிவுரை எழுதப்பட்டிருக்குமாயின், ஒவ்வொன்றிற்கும் தலா 1 புள்ளி வீதம் வழங்கவும். அவ்வாறு எழுதப்படவில்லையென்றால், விடையின் தரத்தின் அடிப்படையில் உள்ளடக்கத்திற்கே பத்து மதிப்பெண்களையும் பிரித்து வழங்கவும். சில பரீட்சார்த்திகள் சுவிஸ் கன்டன்களின் சுயாட்சி அதிகாரங்கள் தொடர்பான முக்கிய குறிப்புகளை அறிமுகம் மற்றும் முடிவுரை இல்லாமல் எழுதியிருக்கலாம். அத்தகைய விடைகள் முழுப் புள்ளிகளைப் பெறுவதற்கு தகுதியானவை என்பதனை கருத்திற் கொள்க.

சுவிஸ் கன்டன்களுக்கு பின்வரும் சுயாட்சி அதிகாரங்கள் உள்ளன:

- கன்டன் அரசியலமைப்புகள்: கன்டன்கள் தங்கள் கன்டன்களுக்கான அரசியலமைப்புகளை தாங்களே வரைந்து கொள்ளலாம். இதனால், அவர்கள் தங்கள் அரசியல் முறைமை, சொந்த கீதம் மற்றும் தமக்கான கொடியினையும் தீர்மானிக்கலாம்.
- உள்ளூராட்சி அரசாங்க அலகுகள்: கன்டன்கள் தமது உள்ளூராட்சி அரசாங்க அலகுகளின் அதிகாரங்களைத் தீர்மானிக்கின்றன. இருப்பினும், அந்த அதிகாரங்கள் குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீற முடியாது. கூட்டாட்சி நீதித்துறை குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கின்றது.
- கல்வி: கல்வி என்பது கன்டன்களின் பாரம்பரியப் பொறுப்பாக இருந்து வருவதுடன், அது தற்போதும் தொடர்கிறது. கன்டன்களுக்கு அதன் பாடத்திட்டம், நியமனங்கள் மற்றும் கல்வி ஊழியர்கள் மீது அதிகாரம் உள்ளது.
- பொது ஒழுங்கு: அமைதி காலத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிப்பது கன்டன்களின் பொறுப்பாகும் - பொலிஸ் அதிகாரம் (police power).
- கலாச்சாரம்: சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டு, கலாச்சார நடவடிக்கைகளை ஆதரிக்கவும், கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும் கன்டன்களுக்கு அதிகாரமுண்டு.
- உள்கட்டமைப்பு: வீதிகளை அமைக்கவும், மின்சாரம் மற்றும். தண்ணீரை வழங்கவும் கன்டன்களுக்கு அதிகாரமுள்ளது.
- நேரடி வரிவிதிப்பு: கன்டன்களுக்கு நேரடி வரி விதிப்பதற்கான அதிகாரம் காணப்படுகின்றது.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**மேலதிக குறிப்புக்கள் :**

கன்டன்களின் அதிகார பூர்வ மொழியை வரையறுக்கும் அதிகாரம் கன்டன்களுக்கு உண்டு. சுவிட்சர்லாந்தில் நான்கு அதிகார பூர்வ மொழிகள் உள்ளன. எனவே கன்டன்களின் அதிகார பூர்வ மொழிகளைப் பற்றி அந்தக் கன்டன்களே முடிவு செய்யலாம். அதிகார பூர்வ மொழிகள் பற்றிய அதிகாரம் கன்டன்களின் அதிகார வரம்பிற்குள் வருகிறது. இருமொழிகளைக் கொண்ட கன்டன்கள் இரண்டு அதிகார பூர்வ மொழிகளுக்கும் சமமான இடத்தை வழங்குகின்ற அதே நேரத்தில், கிறிசன் கன்டன் (Canton of Grison) மூன்று மொழிகளைக் கொண்டது. இது அந்த மூன்று மொழிகளுக்குமான சமமான இடத்தை வழங்குகிறது.

- மதத்திற்கும் அரசுக்கும் இடையிலான உறவுகள்
- இயற்கை மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்
- பொது சுகாதாரம்
- கன்டன்களின் வீதிகள்
- காடுகள், நீர், இயற்கை வளங்கள்
- குடியுரிமை

சுவிஸ் அரசியலமைப்பின் உறுப்புரை 54 – 125 இல் மத்திய கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரம் கன்டன்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கன்டன்களின் இறையாண்மை கூட்டாட்சி அரசியலமைப்பால் வரையறுக்கப்படாத வரை கன்டன்கள் இறையாண்மை கொண்டவை. அவை "மத்திய அரசாங்கத்திற்கு (பெடரலுக்கு) மாற்றப்படாத அனைத்து உரிமைகளையும் பயன்படுத்தலாம்" (அரசியலமைப்பின் உறுப்புரை 3).

**9. ~~இலங்கையின் உள்நாட்டுக் கொள்கையில் புதிய பூகோள அரசியல் மற்றும் பொருளாதார போக்குகளின் தாக்கம்~~** **(20 புள்ளிகள்)**

ஒரு முன்மாதிரியான விடைக்கட்டமைப்பு பின்வரும் குறிப்புக்களை உள்ளடக்கி அமைந்திருக்கலாம்:

1. சமகால உலகில் எந்த ஒரு நாடும் தனியாகச் செயற்படுவதில்லை.

2. மேலும், இலங்கை ஒரு சிறிய நாடாக, சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார யதார்த்தங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது.

3. இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கையைப் பாதிக்கும் சமகால முக்கியமான பிரச்சினைகள்/ நிகழ்வுகள் பற்றிய குறிப்பு.

அறிமுகம்:

இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு, வெளிப்புறச் செயன்முறைகளுக்கும் உள்நாட்டுக் கொள்கைகளுக்கும் இடையிலான உறவு மிகவும் முக்கியமானது. இன்றைய ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகில், எந்த நாடும் தனியாகச் செயற்படவில்லை. இலங்கையின் உள்நாட்டுக் கொள்கைகள் வெளிப்புற அரசியல் மற்றும் பொருளாதார சக்திகளின் தொடர்ச்சியான தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றது. ஏனெனில் நாடு உலகளாவிய யதார்த்தங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது.

இந்த தொடர்பைப் புரிந்துகொள்வதற்கு, சமகால உலகப் போக்குகளை அடையாளம் கண்டு, அவை இலங்கையின் உள்நாட்டுக் கொள்கை வகுப்பில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்பதை ஆராய்வது அவசியமாகும்.

**இலங்கையை பாதிக்கும் சமகால உலகளாவிய போக்குகள்**

இலங்கையைப் பாதிக்கும் முக்கிய உலகளாவிய போக்குகள் பின்வருமாறு:

- உலகமயமாக்கம்
- அதிகார சமநிலையின் மாற்றம்
- இந்தோ-பசுபிக் போட்டி
- உட்கட்டமைப்பிற்கு நிதியளித்தல்
- பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்கள்
- காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் அபாயம்

இத்தகைய மாற்றமுறும் காரணிகள் ஒவ்வொன்றும் இலங்கையின் உள்நாட்டுக் கொள்கை வடிவமைப்புடன் தனித்தனியாகவும் இணைந்தும் தொடர்புறுகின்றன.

**உலகமயமாக்கம்**

உலகமயமாக்கம் என்பது அரசுகளின் அரசியல் மற்றும் பொருளாதார இறையாண்மையை மீள்வடிவமைப்புச் செய்யும் ஒரு பன்முக செயன்முறையாகும். அரசியல் ரீதியாக, இது ஆள்புலம் மற்றும் ஆட்சிக் கட்டமைப்புகள் மீதான அரசின் கட்டுப்பாட்டை பலவீனப்படுத்துகிறது. அரசியல் இறையாண்மையில் உலகமயமாக்கலின் முக்கிய தாக்கங்களில் ஒன்று, சர்வதேச மனித உரிமைகள் கட்டமைப்பின் ஒருங்கிணைப்பு வடிவத்தில் இடம்பெறுகிறது. ஆட்சி முறை மற்றும் கருத்தியல் காரணமாக ஒரு காலத்தில் இம் மனித உரிமைகள் கட்டமைப்பினுள் குறைவாக ஒருங்கிணைக்கப்பட்ட இலங்கை, தற்போது அதன் ஆட்புல எல்லைகளுக்குள் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் அதன் சர்வதேச நற்பெயருக்கும் இடையிலான பரஸ்பர தங்குநிலையை ஏற்றுக் கொண்டுள்ளது. இறுதி உள்நாட்டுப் போரின் போது மனித உரிமை மீறல் நடந்ததாக ஐக்கிய நாடுகள் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் சர்வதேச உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்புகள் சுமத்திய குற்றச்சாட்டைத் தொடர்ந்து, இது தெளிவாகத் தெரிந்தது. இந்தநிலை, குற்றச்சாட்டுகளை நிவர்த்தி செய்ய, இலங்கை அரசாங்கம் சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. உதாரணமாக, LLRC ஆணைக்குழு நியமனம் மற்றும் OMP அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டமை.

பொருளாதார ரீதியாக, உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பது இலங்கை போன்ற சிறிய நாடுகளின் சுயாதீனத் தன்மைய கட்டுப்படுத்துகிறது. பாரம்பரிய அர்த்தத்தில் கூறுவதானால் உலகமயமாக்கல் "பொருளாதார இறையாண்மையை" பயன்படுத்தும் திறனைக் குறைக்கிறது. உதாரணமாக, 1980 களின் நடுப்பகுதியில் இருந்து இலங்கையின் பொருளாதார தாராளமயமாக்கல், முற்றிலும் சுயவிருப்பினால் உந்தப்பட்ட கொள்கை மாற்றங்கள் என்பதை காட்டிலும், உலகளாவிய பொருளாதார சக்திகளின் அழுத்தங்களை பிரதிபலித்து நின்றது.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

இலங்கை 2008 சர்வதேச நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட்டது. இது வர்த்தக அளவு, பணப்புழக்கம் மற்றும் நம்பிக்கையைக் குறைத்தது. இதனால் இலங்கை அரசாங்கம் அதன் நிதிக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வழிவகுத்தது. சர்வதேச நாணய நிதியம் (IMF) இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட திடீர் மந்தநிலையை, அக்கால சர்வதேச நிதி நெருக்கடியுடன் இணைத்து, இலங்கைக்கு $2.6 பில்லியன் உதவியினை வழங்க முன்வந்தது. 2022 இல் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இந்த சார்புநிலையை மேலும் எடுத்துக்காட்டியது: சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) "நம்பகத்தன்மை நங்கூரம் (credibility anchor)" எனும் கொள்கையின் கீழ், கடன்களை மறுசீரமைக்க அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு வரிவிதிப்பு, ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் நிதி ஒழுங்குமுறை ஆகியவற்றில் சீர்திருத்தங்கள் தேவைப்பட்டன. இதன் விளைவாக, உலகமயமாக்கல் இலங்கையை பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் மீட்சிக்காக வெளிப்புற தலையீடுகளில் அதிகளவில் தங்கியிருக்கச் செய்துள்ளது.

**உட்கட்டமைப்பிற்கு நிதியளித்தல்**

உலகளாவிய மூலதன ஓட்டங்களும் வெளிநாட்டு நிதியுதவியும் நிர்வாகம் மற்றும் சீர்திருத்தப் முன்னெடுப்புக்களை ஆழமாக பாதிக்கின்றன. மேற்கத்திய அபிவிருத்தி உதவிகள் பெரும்பாலும் ஆளுகை, ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சந்தை சீர்திருத்தங்கள் தொடர்பான நிபந்தனைகளைக் கொண்டுள்ளது. சிறிய நாடுகளுக்கு, இத்தகைய நிபந்தனைகளை புறக்கணிப்பது கடினமானதாகும்.

இலங்கையில், 1980கள் மற்றும் அதைத் தொடர்ந்து வந்த தசாப்தங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட சுதந்திர சந்தை சீர்திருத்தங்கள் பெரும்பாலும் இந்த வெளிப்புற நிபந்தனைகளால் வடிவமைக்கப்பட்டன. 2022 நிதிச் சரிவைத் தொடர்ந்து, பொருளாதார உயிர்வாழ்வு வெளியுறவுக் கொள்கையுடன் பின்னிப் பிணைந்ததால் உதவி நிபந்தனைகள் தீவிரமடைந்தன. இதனால், இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதாரம் சார் முடிவுகள் பெரும்பாலும் அதன் வெளிப்புறக் கடன் வழங்குநர்கள் மற்றும் நன்கொடையாளர்களின் எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிக்கின்றன.

**பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்கள்**

சர்வதேச ரீதியாக அதிகரித்து வரும் பொருட்களின் விலையேற்றம் மற்றும் விநியோகச் சங்கிலிகளில் ஏற்படும் இடையூறுகள், இலங்கை போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியை பெரிதும் சார்ந்துள்ள நாடுகளுக்கு நேரடித் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. எனவே இறக்குமதி பாதுகாப்பை உறுதி செய்வது ஒரு முக்கிய வெளியுறவுக் கொள்கை முன்னுரிமையாக மாறியுள்ளது. 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட எரிபொருள், உணவு மற்றும் மருந்து பற்றாக்குறை இந்த பாதிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. மற்றும், நெருக்கடியைத் தணிக்க பிராந்திய பங்காளர்களான, குறிப்பாக, முக்கியமான எரிபொருள் கடன் வரிகளை நீட்டித்து தந்த இந்தியாவை, இலங்கை சார்ந்திருப்பதை மேலும் வலுப்படுத்தியது.

இதன் விளைவாக உள்நாட்டு ஸ்திரத்தன்மையானது வெளிப்புற பொருளாதார நிலைமைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியாக பொருட்கள் மற்றும் சந்தைகளில் ஏற்படும் மாற்றங்கள் குறிப்பாக அத்தியாவசிய பொருட்களின் விலை நிர்ணயம் மற்றும் கட்டுப்பாடு குறித்த இலங்கை அரசின் கொள்கை மற்றும் தீர்மானங்களுக்கு இட்டுச் செல்கிறது.

இது உள்நாட்டில் குடும்பங்களையும் அரசின் கொள்கை முன்னுரிமைகளையும் உடனடியாகப் பாதிக்கும் ஒன்றாக உள்ளது.

**அதிகார சமநிலைகளில் ஏற்படும் மாற்றங்கள்**

பல்துருவத் தன்மையினை நோக்கிய உலகளாவிய மாற்றம்—சீனாவின் எழுச்சி மற்றும் மேற்கத்திய ஆதிக்கத்தின் ஒப்பீட்டு ரீதியான வீழ்ச்சி—இலங்கை அதன் வெளியுறவு மற்றும் உள்நாட்டுக் கொள்கைகளை மறுபரிசீலனை செய்யக் கட்டாயப்படுத்தியுள்ளது. குறிப்பாக வேகமாக எழுச்சியுறும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளின் BRICS இன் கீழான ஒன்றிணைவு அமெரிக்கா மற்றும் மேற்குலகின் பொருளாதார ஆதிக்கத்தை கட்டுப்படுத்தி புதிய மற்றும் மாற்று உலக ஒழுங்கை உருவாக்க எடுக்கும் முயற்சி சிறிய நாடுகளின் உள்நாட்டுக் கொள்கையை பாதிப்பதாக உள்ளது.

அபிவிருத்திசார் உதவிகளில் தங்கியுள்ள நாடு என்ற வகையில் இலங்கையானது, சீனாவுடனான பொருளாதார உறவுகளை ஆழப்படுத்த முயலுகின்ற அதேவேளை இந்தியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் வலுவான உறவுகளைப் பேணவும் முயற்சி செய்கின்றது.

இருப்பினும், இந்த சமநிலைப்படுத்தும் செயல் உள்நாட்டு அரசியல் உணர்திறன்களை உருவாக்குவதுடன், குறிப்பாக, வெளிநாட்டு சக்திகளால் நிதியளிக்கப்படும் உள்கட்டமைப்பு திட்டங்கள் மீதும் பாதிப்பை செலுத்துகிறது. துறைமுக அபிவிருத்திகள் மற்றும் இணைப்பு முயற்சிகள் போன்ற திட்டங்கள் அவற்றின் மூலோபாய தாக்கங்கள் காரணமாக இலங்கைக்குள் பெரும்பாலும் போட்டி நிலையினை உண்டாக்கியுள்ளன. குறிப்பாக, அமெரிக்காவினால் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தங்களை (உ-ம் SPP, ACSA மற்றும் SOFA) நிறைவேற்றிக் கொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சிகள், இலங்கையின் உள்நாட்டுக் கொள்கை உருவாக்கத்தில் பொருளாதார மற்றும் பாதுகாப்புக் கரிசனைகள் எவ்வாறு குறுக்கீடு செய்கின்றன என்பதை விளக்குகின்றது. இதன் விளைவாக, உட்கட்டமைப்புக் கொள்கை ஒரு பொருளாதார மற்றும் மூலோபாயத் தெரிவாகச் செயற்படுகிறது.

**இந்தோ-பசுபிக் போட்டி**

இந்தோ-பசுபிக் பகுதியில் அதிகரித்து வரும் மூலோபாய போட்டி - குறிப்பாக சீனா மற்றும் அமெரிக்க-இந்தியா-ஜப்பான் கூட்டணிக்கு இடையே - பிராந்திய உட்கட்டமைப்பு மற்றும் கடன் வழங்கலை பாதுகாப்புடன் தொடர்புபட்டதாக ஆக்குகிறது. இந்தியப் பெருங்கடலில் ஒரு முக்கிய புள்ளியில் அமைந்துள்ள இலங்கையைப் பொறுத்தவரை, இந்தப் போட்டி அதன் வெளியுறவுக் கொள்கைத் தெரிவுகளை சிக்கலாக்குகிறது. மேலும், இலங்கை ஒரு நாடாக, "பல-அணி சேர்வு (multi-alignment)" என்ற உபாயத்தை கையாளத் தூண்டியுள்ளது. இது பொருளாதார நன்மைகளை அதிகப்படுத்தும் அதே வேளையில் பிரதான வல்லரசுக்கு இடையிலான உறவுகளை சமநிலைப்படுத்த முயல்கிறது.

இது உள்நாட்டில், உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அது குறித்து பரிசீலனை செய்வதை அதிகரிக்கச் செய்கிறது. ஒவ்வொரு கொள்கை நடவடிக்கையும் தேசிய வளர்ச்சியை ஊக்குவிக்கும் அதே வேளையில் புவிசார் அரசியல் பதட்டங்களைத் தூண்டுவதைத் தவிர்ப்பதாக அமையவேண்டும்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

2022 பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு, ரணில் விக்கிரமசிங்கவின் கீழ், இடைக்கால அரசாங்கம் அனைத்து முக்கிய பங்காளர்களுடனும் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப முயன்றபோது, இந்த மூலோபாய சமநிலை தெளிவாகத் தெரிந்தது. அதைத் தொடர்ந்து வந்த NPP அரசாங்கம், இந்த அணுகுமுறையைத் தொடர்ந்து பின்பற்றுகின்றது.

**காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் அபாயம்**

காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை பேரிடர்கள் இலங்கையின் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கை நிகழ்ச்சி நிரல்களை அதிகளவில் வடிவமைக்கும் நிகழ்வுகளுள் ஒன்றாக உள்ளது. இயற்கை அனர்த்தங்கள் பரவலான மனித மற்றும் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்துகின்றன, இதனால் அரசு சர்வதேச உதவியை நாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதுபோன்ற சூழல்களில், வெளிநாட்டு உதவி ஒரு மனிதாபிமான கருவியாக மட்டுமல்லாமல் செல்வாக்கு செலுத்துவதற்கான ஒரு பொறிமுறையாகவும் மாறுகிறது.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி முதல் டித்வா (Ditwah) சூறாவளி வரையிலான இலங்கையின் அனுபவங்கள், பேரிடர் ராஜதந்திரம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் காட்டுகின்றன. "ஆபரேஷன் ரெயின்போ (Operation Rainbow)" மற்றும் "சாகர் பந்து (Sagar Bandhu)" போன்ற நடவடிக்கைகள் மூலம் இந்தியா தொடர்ந்து முதலில் உதவியளிப்பவராக இருந்து வருகிறது. அதே நேரத்தில் சீனா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவும் குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்கியுள்ளன. இதனால் காலநிலை மீண்டெழும் தன்மை மற்றும் பேரிடர் முகாமைத்துவம் ஆகிய இரண்டும் இலங்கையின் வெளிநாட்டு உறவுகள் மற்றும் உள்நாட்டுத் திட்டமிடல் கட்டமைப்பு மையத்தின் அங்கமாக மாறியுள்ளன.

**முடிவுரை**

இலங்கையின் உள்நாட்டுக் கொள்கை உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார போக்குகளுடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளது. ஒரு சிறிய, பூகோள ரீதியாக ஒருங்கிணைந்த மற்றும் இறக்குமதியைச் சார்ந்த நாடாக, நிதி, வர்த்தகம் மற்றும் பாதுகாப்புச் சூழல்களில் ஏற்படும் மாற்றங்களால் இலங்கை தொடர்ந்தும் பாதிப்புறும் நாடாக உள்ளது. IMF இன் நிபந்தனைகள் மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புடைய நிர்வாகத் தரநிலைகள் முதல் மூலோபாய போட்டி மற்றும் காலநிலை பாதிப்புக்கள் உள்ளிட்ட வெளிப்புற அழுத்தங்கள் இலங்கையின் உள்நாட்டு நிகழ்ச்சி நிரலில் தொடர்ந்தும் தாக்கம் செலுத்துகின்றன.

2022 நெருக்கடிக்குப் பிறகு, இப் பரஸ்பர தங்குநிலை தீவிரமடைந்துள்ளது. பொருளாதார மீட்சி, நிர்வாக சீர்திருத்தம் மற்றும் வெளியுறவுக் கொள்கை சீரமைப்பு ஆகியவை தற்போது இலங்கையின் தேசிய மூலோபாயத்தின் பிரிக்க முடியாத பரிமாணங்களாகும். அதிகரித்து வரும் சிக்கலான மற்றும் போட்டி நிறைந்த உலகளாவிய சூழலை கையாளும் அதே வேளையில் உள்நாட்டில் சீரானதன்மையினை பேணுவதே இலங்கையின் பிரதான சவால்களில் ஒன்றாக உள்ளது.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(10×2= 20புள்ளிகள்)

**(i). பொதுக் கொள்கை உருவாக்கத்தில் அரசியல் கட்சிகளின் வகிபாகம் (10 புள்ளிகள்)**

பொதுக் கொள்கை உருவாக்கம் என்பது மக்களின் தேவைகள், நலன்கள், சமூகப் பிரச்சினைகள், கோரிக்கைகள் மற்றும் கேள்விகளுக்கு பதிலளிக்கின்ற ஒரு இயங்குதன்மை கொண்ட (மாறுகின்ற) செயன்முறையாகும்.

ஜனநாயக நாடுகளில், அரசியல் கட்சிகள் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான மிக முக்கியமான இணைப்பாகும். அந்த வகையில், பொதுக் கொள்கைகளை உருவாக்கும் செயன்முறையானது அரசியல் கட்சிகளால் இலகுபடுத்தப்படுகிறது. பொதுக் கொள்கைகள் இறுதியில் அரசியல்வாதிகளாலும், அதன் பணியகவமைப்பினாலும் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டாலும், அவை குடிமக்களின் தேவைகள் மற்றும் நலன்களையே பிரதிபலிக்கின்றன.

I. கட்சிக் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் மூலம், பொதுக் கொள்கை உருவாக்கத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அரசியல் கட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

II. கட்சி நிகழ்ச்சி நிரலின் மூலம், அரசியல் கட்சிகள் பொதுக் கொள்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் குறித்து பொது விவாதங்கள் மற்றும் உரையாடல்களை உருவாக்குகின்றன. அவை கொள்கை பிரச்சினைகளுக்கு பொதுமக்களின் ஆதரவையும் திரட்டுகின்றன. இதனால் கட்சி நிகழ்ச்சி நிரல்களும், கொள்கைகளும் பொதுக் கொள்கை நிகழ்ச்சி நிரல்களை உருவாக்குவதில் செல்வாக்கு செலுத்துகின்றன.

III. ஜனநாயக சமூகங்களில், அரசியல் கட்சிகள் பொதுப்பரப்பில் காணப்படுகின்ற பிரச்சினைகளை, கொள்கை நிகழ்ச்சி நிரல்களில் உள்ளடக்கப்பட வேண்டிய பொதுப் பிரச்சினைகளாக ஒழுங்குபடுத்தி ஓர் முறைமைக்கு உட்படுத்துவதுடன், அதற்கான அழுத்தத்தினையும் வழங்குகின்றன.

IV. அரசியல் கட்சிகள் மக்களின் தேவைகள் மற்றும் நலன்களை கொள்கை விவாதங்களுடன் ஒருங்கிணைக்கின்றன.

V. அரசியல் கட்சிகள் தற்போதுள்ள கொள்கைகள் மற்றும் முன்மொழியப்பட்ட கொள்கைகளின் எதிர்மறை மற்றும் நேர்மறையான அம்சங்கள் குறித்து பொதுமக்களை அறிவூட்டுகின்றன. இது பொதுக் கொள்கைகளை பொது மக்களின் விமர்சனங்களுக்கு அல்லது அபிப்பிராயங்களுக்கு ஏற்ப மாற்ற உதவுகிறது.

VI. அரசியல் கட்சிகள் அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பிலான பொதுமக்களின் பதிலிறுப்புக்களை வழிப்படுத்துவதன் மூலம் கொள்கை உருவாக்கும் செயற்பாட்டில் குடிமக்களின் பங்கேற்பை இலகுபடுத்துகின்றன. அவ்வாறு செய்வதன் மூலம், அவை பொதுமக்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையே ஒரு இணைப்பாக செயற்பட்டு, கொள்கைத் திருத்தங்களை மதிப்பாய்வு செய்ய உதவுகின்றன.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ஜனநாயக சமூகங்களில் மக்களின் கோரிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் ஒன்றுதிரட்டி, அவற்றை அரசியல் மற்றும் கொள்கை பிரச்சினைகளாக மாற்றும் பிரதானமான நிறுவனமாக அரசியல் கட்சிகள் உள்ளன. இவ்வாறு, பொது மக்கள் கொள்கை செயன்முறையுடன் தங்களை இணைத்துக் கொள்வதற்கான ஒரு பிரதானமான நிறுவனப் பொறிமுறையாக அரசியல் கட்சிகள் காணப்படுகின்றன. அதேபோல், அரசியல் கட்சிகளும் கொள்கைகளுக்கு எதிரான பொது மக்களின் ஆதரவையும் எதிர்ப்பையும் வரையறுத்து, வகுத்து, விமர்சித்து, அவற்றை திரட்டுகின்றன.

அந்தவகையில், கொள்கைகளை வகுப்பதிலும், அவற்றை செயற்படுத்துவதிலும், அவற்றைத் திருத்துவதிலும் அரசியல் கட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே, பொதுக் கொள்கைச் செயற்பாட்டில் அரசியல் கட்சிகளின் பங்கு கொள்கையின் அனைத்து கட்டங்களையும் உள்ளடங்கியுள்ளது. மேலும் இது ஜனநாயக நாடுகளில் மிக முக்கியமான வகிபங்காகும். அரசாங்கத்தின் தன்னிச்சையான கொள்கை உருவாக்க செயற்பாடுகளை கட்டுப்படுத்த, நெறிப்படுத்த மற்றும் மக்கள் நலக் கொள்கைகளை உருவாக்க அழுத்தம் கொடுப்பதில் அரசியல் கட்சிகளின் வகிபங்கு பெரிதும் அவசியமாகவுள்ளது.

### (ii) சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் என்ற எண்ணக்கரு

சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்ற எண்ணக்கருவானது நீடித்த விவாதங்களுக்கு உட்பட்டதொரு எண்ணக்கருவாகும். அதன் அர்த்தமானது மூன்று விடயங்களில் தங்கியுள்ளது.

i. சமாதானத்தை கட்டியெழுப்புதல் எப்பொழுது முன்னெடுக்கப்படுகின்றது.
ii. எவ்வாறான அல்லது எத்தகைய சமாதானத்தை அது உருவாக்க முற்படுகின்றது
iii. யார் அதில் ஈடுபடுகிறார்கள் மற்றும் எந்த மட்டங்களில் (Level) அது இடம்பெறுகின்றது என்பனவாகும்.

01. **காலச் சூழல்:** சமாதானத்தை கட்டியெழுப்புதல் எப்பொழுது இடம்பெறுகின்றது. அந்தவகையில் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மோதலின் இரண்டு கட்டங்களில் இடம்பெறும்.

#### i. மோதலுக்குப் பின்னரான சமாதானத்தை கட்டியெழுப்புதல் :

மோதல் முடிவடைந்த பின்னர் மீண்டும் வன்முறை நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய எடுக்கும் நடவடிக்கைகளாகும். இது பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி என்பவர் அறிமுகம் செய்த சமாதானத்துக்கான ஒரு நிகழ்ச்சி நிரலுடன் (An Agenda for Peace) ஒத்து நிற்கின்றது. இதில் போருக்கு பின்னரான சமாதானம் குறித்து வலியுறுத்தப்படுகின்றது.

#### ii. மோதலுக்கு முன் சமாதானத்தை கட்டியெழுப்புதல் :

பெரியளவிலான வன்முறைகள் வெடிக்கும் முன்பு நடவடிக்கை எடுத்தலாகும். இங்கு சமாதானத்தை கட்டி எழுப்புதல் என்பது குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் மோதலை தடுத்தல் என்ற எண்ணக்கருவுடன் தொடர்புபடுகின்றது. சமாதானத்தை கட்டியெழுப்புதல் மேற்கூறிய இரு கட்டங்களில் இடம்பெற்றாலும், சமகால கலந்துரையாடல்கள் அதிகளவில் மோதலுக்கு பிந்திய சமாதானத்தை கட்டியெழுப்புதல் பற்றியே அதிகம் கரிசனை செலுத்துகின்றன.

## 02. எத்தகைய சமாதானம் கட்டியெழுப்பப்படுகின்றது:

- சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பது அது எந்த வகையான சமாதானத்தை உருவாக்க முற்படுகிறது என்ற அடிப்படையிலும் வேறுபடுகின்றது. குறிப்பாக மோதலை சாதாரணமாக முடிவுக்குக் கொண்டு வந்து வன்முறைகளை தூண்டிய சூழ்நிலையினை நிலைமாற்றம் செய்தலாகும்.
- Johan Galtung என்பவர் முன்வைத்த சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பது இரண்டு சிந்தனைகளுடன் தொடர்புபட்டுள்ளது.

### 1. எதிர்மறையான சமாதானம் :

யுத்தம் மற்றும் நேரடி வன்முறை இல்லாத நிலையினை குறித்து நிற்கின்றது. இது போர் நிறுத்த உடன்படிக்கை அல்லது சமாதான உடன்படிக்கை மூலம் அடையப்படுகின்றது.

### 2. நேர்மறையான சமாதானம் :

- இது வன்முறையினை முடிவுக்குக் கொண்டு வருதல் என்பதற்கு அப்பால் நீண்ட கால அடிப்படையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடாகும். இது வேறுபட்ட சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வினைக் கட்டியெழுப்புதல், சமாதானக் கல்வி, சர்வதேச ஒத்துழைப்பு, வினைத்திறன்மிக்க மோதல் முகாமைத்துவம் மற்றும் அசமத்துவம், அநீதி என்பவற்றினால் தூண்டப்பட்ட, கட்டமைக்கப்பட்ட வன்முறைகளை சரியான முறையில் கையாள்வதன் மூலம் சாத்தியமாகும்.
- இதன் அடிப்படையில் நோக்கும் போது சமாதானத்தை கட்டியெழுப்புவது என்பது வெறுமனே வன்முறையினை நிறுத்துவது மாத்திரமல்ல. அது வன்முறைகளை தூண்டிய சமூக - அரசியல் காரணங்களை சரியான முறையில் கையாண்டு வன்முறைகள் மீண்டும் நிகழாதிருப்பதை குறித்து நிற்கின்றது.
- இதன் காரணமாகவே கல்துங் நிலையான சமாதானம் என்ற எண்ணக்கருவை அறிமுகம் செய்தார். சமாதானம் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்க வேண்டும். அது எழும் புதிய சவால்களுக்கு பதில் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஆகவே சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பது நேர்மறையான மற்றும் நிலையான சமாதானமாக இருக்க வேண்டும். மாறாக மோதலை முடிவுக்கு கொண்டு வருவதுடன் மாத்திரம் நின்று விடக்கூடாது.

## 03. செயற்பாட்டாளர்கள் மற்றும் மட்டங்கள்: சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் யார் ஈடுபடுகின்றனர் மற்றும் எந்த மட்டத்தில் இடம்பெறுகின்றது

சமாதானத்தினைக் கட்டியெழுப்புவதனை விளங்கிக் கொள்வதற்கான பிறிதொரு வழி யாதெனில், சமாதானத்தை கட்டியெழுப்புவதில் எத்தகைய செயல்பாட்டாளர்கள் ஈடுபடுகிறார்கள் மற்றும் எந்த மட்டத்தில் அது இடம்பெறுகின்றது என்பதாகும்.

### i. ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டில் இடம்பெறுவது:

வன்முறைகள் மீண்டும் நிகழ்வதனை தடுப்பதற்கும் மற்றும் மோதலை முகாமை செய்வதற்கும் அவசியமான நிறுவனக் கட்டமைப்புக்களையும், கொள்திறனையும் மேம்படுத்துவதன் மீது இவ்வணுகுமுறை அதிக கரிசனைக் காட்டுகின்றது. இவ்வணுகுமுறை ஒவ்வொரு நாட்டினதும் சூழலுக்கு ஏற்ப ஒருங்கிணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

இது நிலையான சமாதானம் மற்றும் அபிவிருத்தி என்ற சட்டகத்தினை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது.

**ii. சமூக மட்ட சமாதானத்தை கட்டியெழுப்புதல்:**

இது அடிமட்டத்தில் சிவில் சமூகத்தின் பங்களிப்புடன் இடம்பெறுகின்றது. John Paul Lederach என்பவர் நீடித்த மோதல்களினால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் அடிமட்ட செயற்பாடுகள் மற்றும் அமைப்புகள் ஊடாக நிலையான சமாதானத்தினைக் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றார். சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் சமூக நம்பிக்கையினை ஏற்படுத்துவதில் சாதாரண மக்கள், சிவில் சமூகம், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றுக்கு முக்கிய பங்குண்டு என்பதனை இவர் வலியுறுத்துகின்றார்.

- **ஒருங்கிணைந்த அணுகுமுறை**

இவ் அணுகுமுறையானது சமாதானத்தினைக் கட்டியெழுப்புவதனை சூழமைவு சார்ந்தது எனவும், பல்மட்ட செயன்முறையினைக் கொண்டதெனவும், அது மோதலை தடுத்தல் மற்றும் மோதலுக்கு பின்னரான மீட்பு போன்றவற்றுடன் நீண்டு செல்கின்றது எனவும் குறிப்பிடுகின்றது. ஆற்றலை விருத்தி செய்தல் மற்றும் அடிமட்ட சமூகங்களின் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புதல் போன்ற உபாயங்களுடன் மோதலில் பாதிக்கப்பட்ட சமூகங்களை எதிர்மறையான சமாதானத்திலிருந்து நேர்மறையான மற்றும் நிலையான சமாதானத்தை நோக்கி நகர்த்த முற்படுகின்றது.

**குறிப்பு: பரீட்சார்த்திகள் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலின் மூன்று கட்டங்களை சுருக்கமாக குறிப்பிட்டிருந்தால் முழுமையான புள்ளிகளை வழங்கவும்.**

**(iii). உலக சமாதானத்தை உறுதிப்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபையின் வகிபங்கு**

ஐக்கிய நாடுகள் (ஐ.நா) சபை இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் 1945ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இன்று உலகில் காணப்படும் மிகப்பெரிய அரசுகளுக்கிடையிலான ஒழுங்கமைப்பாகும். ஐ.நாவின் ஆறு பிரதான அங்கங்களாக பொதுச்சபை, பாதுகாப்பு சபை, சமூக பொருளாதார கவுன்சில், சர்வதேச நீதிமன்றம், செயலகம் மற்றும் நம்பிக்கை பொறுப்புச் சபை என்பன காணப்படுகின்றன. சர்வதேச சமாதானத்தினையும், பாதுகாப்பினையும் உறுதி செய்தல், நாடுகளுக்கிடையில் நட்பு ரீதியான உறவினை கட்டியெழுப்புதல், சர்வதேச ஒத்துழைப்பினை மேம்படுத்தல், சமாதானம் மற்றும் அபிவிருத்தியினை ஒருங்கிணைப்பதற்கான தளத்தினை வழங்குதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. இவற்றில் சமாதானமும், பாதுகாப்பும் ஐ.நாவின் மைய நோக்கமாக காணப்படுகின்றன.

**உலக சமாதானத்தை ஊக்குவிப்பதில் ஐ.நாவின் வகிபங்கு மற்றும் பணிகள்**

ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் முதலாவது உறுப்புரையில் ஐ.நாவின் பிரதான நோக்கம் "சர்வதேச சமாதானத்தினையும், பாதுகாப்பினையும் பேணுவதாகும்" என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் ஐ.நா பட்டயம் சர்வதேச சமாதானத்தையும், பாதுகாப்பினையும் பேணும் பொறுப்பினை பாதுகாப்பு சபைக்கு வழங்கியுள்ளது.

அந்த வகையில் பாதுகாப்பு சபையானது பின்வரும் சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

- ✓ பேச்சுவார்த்தை மற்றும் கலந்துரையாடல்களை பரிந்துரை செய்தல்
- ✓ மோதல்களை விசாரித்தல் மற்றும் உண்மைகளை கண்டறிதல்
- ✓ மோதல் தரப்பினர்களுக்கிடையில் மத்தியஸ்தம் செய்தல்
- ✓ விசேட பிரதிநிதிகள் மற்றும் தூதுவர்களை நியமித்தல்
- ✓ செயலாளர் - நாயகத்தின் அலுவலகத்தின் ஊடாக இராஜதந்திர ரீதியான உதவிகளை வழங்குதல்

மேற்கூறிய நடவடிக்கைகள் வன்முறையினை அல்லது மோதலை நிறுத்த உதவாவிட்டால், பாதுகாப்புச் சபை பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

- ✓ போர் நிறுத்த உடன்படிக்கைக்கு அழைப்பு விடுத்தல்
- ✓ ஐ.நா அமைதி காக்கும் படையினரை அனுப்பி வைத்தல்
- ✓ தடைகளை அல்லது கட்டுப்பாடுகளை விதித்தல் (வர்த்தகம்/ விசா)
- ✓ தேவைப்படும் போது கூட்டு இராணுவ செயற்பாட்டுக்கு அனுமதி வழங்கல்

பரந்த அடிப்படையில் நோக்கும் போது ஐ.நா உலக சமாதானத்திற்கான சட்டகமொன்றினை, சமாதானத்துக்கான தளத்தினை ஏற்படுத்துதல், ஒழுங்குகள் மற்றும் இராஜதந்திரத்தினை பின்பற்றுதல், அமைதி காக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் போருக்கு பின்னரான மீள்கட்டுமானம் போன்ற உபாயங்களின் ஊடாக வழங்குகின்றது.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது ஐ.நா பின்வரும் இரண்டு வழிகளில் சமாதானத்துக்கு பங்களிப்பு செய்கின்றது.

**1. ஆக்கபூர்வமான பங்களிப்பு:**

போரினை தடுப்பதன் மூலம் சமாதானத்தினை கட்டியெழுப்புதல், அமைதிகாக்கும் படையினரை குறித்த நாடுகளில் அமர்த்துதல், மற்றும் நீடித்திருக்கும் சமாதானத்துக்கு அவசியமான சூழலை கட்டியெழுப்பி பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவி செய்தல்.

**2. எதிர்வினையாக பங்களிப்பு செய்தல்:**

சர்வதேச சமாதானத்துக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும் சம்பவங்களுக்கு பாதுகாப்பு சபை மற்றும் பொதுச் சபையின் ஊடாக பதிலளித்தல் அல்லது எதிர் வினையினைக் காட்டுதல்.

**மட்டுப்பாடுகளும் சவால்களும்**

ஐ.நாவின் சர்வதேச சமாதானத்தை கட்டியெழுப்பும் இயலுமையினை அதிகாரமிக்க நாடுகள் தமது அரசியல் நலன்களுக்காக மட்டுப்படுத்தியுள்ளன. அதன் சமாதான முயற்சிகளை மழுங்கடித்துள்ளன. ஐ.நாவின் முயற்சிகளையும், பாதுகாப்பு சபையின் தீர்மானங்களையும் வீட்டோ அதிகாரத்தினைக் கொண்டுள்ள ஐந்து நாடுகள் தடுக்கின்றன. இந்நிலைமை உலக சமாதானத்தினை கட்டியெழுப்புவதில் ஐ.நாவின் வகிபங்கினை கேள்விக்குறியாக்கியுள்ளது. இதற்கு தற்போது இடம்பெற்று வரும் **இஸ்ரேல் - பலஸ்தீன மோதல், ரஷ்யா- உக்ரைன் மோதல்** என்பவற்றினை உதாரணங்களாக குறிப்பிட முடியும்.

**குறிப்பு: பரீட்சார்த்திகள் ஐ.நா.வின் வகிபங்கினை சுருக்கமாக குறிப்பிட்டு, நடைமுறைசார்ந்த**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கியிருந்தால் முழுமையான புள்ளிகளை வழங்கவும்.**

**(iv) மதச்சார்பின்மை வாதம்**

மதச்சார்பின்மைவாதம் என்பது அரசியலையும் மதத்தினையும் பிரித்து வைப்பதாகும். இக்கருத்தியலானது அரசியல் விடயங்களில் மதம் உள்நுழையவோ அல்லது தலையீடு செய்யவோ கூடாது எனவும், அதேபோல் அரசியலும் மத விவகாரங்களில் தலையிடக்கூடாது என்பதனை வாதிடுகின்றது. இது சோசலிச மற்றும் தாராண்மைவாத கருத்தியல்களின் சில பண்புகளை அடிப்படையாகக் கொண்டு எழுச்சிப்பெற்ற ஒரு கருத்தியலாகும்.

தாராள மற்றும் சோசலிச அரசியலமைப்புவாதங்களில் மதசார்பின்மைவாதம் ஒரு முக்கிய தத்துவமாக காணப்படுகிறது. தாராள மற்றும் சோசலிச அரசியலமைப்புகள் மதச்சார்பற்றதாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் அடிப்படை அனுமானம் யாதெனில் அரசு மதத்துடன் அடையாளப்படுத்தப்படக் கூடாது என்பதாகும். அந்தவகையில் மதச்சார்பின்மைவாதத்தினை தாராள மதச்சார்பின்மைவாதம் மற்றும் சோசலிச மதச்சார்பின்மைவாதம் என இரண்டாக வகைப்படுத்த முடியும்.

சமகால உலகில் மதச்சார்பின்மைவாதம் தொடர்பான கரிசனை அதிகளவில் ஏற்பட்டுள்ளது. காரணம், மதத்தினையும் அரசியலையும் இரண்டறக் கலப்பதனால் உலகில் பல்வேறு நாடுகளில் வன்முறை, அரசியல் ஸ்த்திரத்தன்மையின்மை மற்றும் மத ரீதியான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

மதச்சார்பின்மை குறித்த சிந்தனை முதலில் ஐரோப்பாவில் 18ஆம் மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் எழுச்சிப்பெற்றது. ஐரோப்பாவில் ஏற்பட்ட அறிவு ரீதியான எழுச்சியின் ஒரு விளைவாக இது அமைந்தது. அந்தவகையில் தாராண்மைவாதம் (லிபரல்வாதம்) மற்றும் சோசலிசம் ஆகிய இரு கருத்தியல்களும் மதச்சார்பின்மைவாத சிந்தனை மரபுக்கு பங்களிப்பு செய்தன.

ஐரோப்பாவில் மதச்சார்பின்மைவாதம் என்ற சிந்தனை ஏற்பட பிரதான காரணம், கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களின் செல்வாக்கு அரசின் மீது மேலோங்கிக் காணப்பட்டமையாகும். ஆகவே மதசார்பின்மைவாதிகள் அரசுக்கும் தேவாலயங்களுக்கும் இடையிலான நிறுவன ரீதியான உறவினை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என வாதிட்டனர். இத்தகையப் பின்புலத்திலேயே 'மதச்சார்பற்ற அரசு' என்ற சிந்தனை வளர்ச்சியடைந்தது.

தாராண்மைவாத சிந்தனைகளான

- சிந்தனைச் சுதந்திரம்,
- மனச்சாட்சிக்கான சுதந்திரம்
- தனிநபர் சுதந்திரம்

என்பன மதச்சார்பின்மைவாத கருத்துக்களுடன் தொடர்புப்பட்டிருந்தன. மதச்சுதந்திரம் என்பது தனிப்பட்டவர்களின் நம்பிக்கையுடன் தொடர்புடைய விடயம் என்பதுடன், அது ஒரு தனிப்பட்ட விடயமாக காணப்பட வேண்டும் என்ற கருத்தினை மதச்சார்பின்மை வாதம் முன்வைக்கின்றது.

PAST PAPERS WIKI

மதச்சார்பின்மைவாதம் தொடர்பான சோசலிச சிந்தனை 'மதம் என்பது அடக்குமுறைக்கான ஒரு ஆதாரம்/ மூலம்' என்ற கருத்தில் இருந்து உருவாகியது. எவ்வாறாயினும், அரசினையும் மதத்தினையும் தனித்தனியாக பிரித்து வைக்க வேண்டும் அல்லது இவ்விரு நிறுவனங்களையும் வேறாக்க வேண்டும் என்ற சுலோகம் சோசலிசம் மற்றும் தாராண்மைவாத கருத்தியல்களில் பிரதான இடத்தினைப் பிடித்தது.

இந்தியாவில் மதச்சார்பின்மைவாதம் தொடர்பாக நீடித்த விவாதம் இடம்பெற்று வருகிறது.

1949ஆம் ஆண்டு அரசியலமைப்பு சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய அரசியலமைப்பில் 'இந்தியா மதச்சார்பற்ற அரசு' என்பது வெளிப்படையாக சொல்லப்படாவிட்டாலும், அரசியலமைப்பில் மதம் சார்ந்த எந்த விடயங்களும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் 1976 ஆம் ஆண்டு இந்திரா காந்தியின் அவசரகால ஆட்சி (1975 – 1977) இந்தியாவில் இடம்பெற்ற காலத்திலேயே அரசியலமைப்புக்கான 42வது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் ஊடாக இந்திய அரசியலமைப்பின் முகப்புரையில் 'மதச்சார்பற்ற குடியரசு' என்பது உட்சேர்க்கப்பட்டது. அதன்படி இந்திய அரசியலமைப்பின் முகவாசகம் ஆறு பிரதான சொற்களைக் கொண்டுள்ளது. அவை, "இந்திய மக்களாகிய நாம், இறைமை, சோசலிச, மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் குடியரசு" என்பவையாகும்.

**குறிப்பு: பரீட்சார்த்திகளின் விடையில் எதிர்பார்க்கப்படுவது மதச்சார்பின்மை வாதம் தொடர்பான கருத்தியலே ஆகும்.**

**(v). இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதித்துவ முறையில் ஜனநாயகத்திற்கு எதிரான பண்புகள்**

1. நிறைவேற்றுத்துறையில் எல்லையற்ற அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளமை.
2. நீதித்துறையினையும் சட்டத்துறையினையும் நிறைவேற்றுத்துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் / அவற்றின் மீது தேவையற்ற செல்வாக்கினை செலுத்துதல்
3. விடுபாட்டுரிமை: சட்டத்தில் இருந்து விடுபட்டு நிற்கும் உரிமை, பதவி காலத்தில் வழக்கு தொடர முடியாமை மற்றும் நீதிமன்றத்தில் நிறுத்த முடியாமை
4. பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தினை துஸ்பிரயோகம் செய்தல்.
5. அரசியல் வன்முறை - இன மற்றும் மதரீதியான வன்முறைகள்
6. சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தல்களை நடாத்துவதற்கு தடையாக இருத்தல் மற்றும் தேர்தல் கால வன்முறைகள் / அரசு சொத்துக்களை துஷ்பியோகம் செய்தல்.
7. அரச மற்றும் சமூகத்தினை இராணுவமயமாக்கல்.
8. அவசரகால ஒழுங்குவிதிகளை சட்டத்திற்கு புறம்பாக பிரயோகித்தல். அதன் ஊடாக சாதாரண சட்டங்களை மறுதலிப்பதும் மற்றும் அடிப்படை உரிமைகளை மீறுவது
9. மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித உரிமைகள் மீதான மட்டுப்பாடுகள்.
10. ஊழல் மோசடிகள் மற்றும் பொது நிறுவனங்களை அரசியல் நலன்களுக்காக துஷ்பிரயோகம் செய்தல்.
11. பயங்கரவாத தடைச்சட்டத்தினைத் தவறாகப் பயன்படுத்துவது அல்லது துஷ்பிரயோகம் செய்தல்.
12. குடும்ப ஆட்சிக்கு வித்திட்டமை.
13. ஜனநாயகப் பொறுப்புக்கூறல் காணப்படாமை
14. சிறுபான்மையினரின் பாதுகாப்பு குறித்த அச்சம்



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



15. அமைச்சர்களை நியமிப்பதில் தொடர்ந்தும் ஜனாதிபதி கனிசமான அதிகாரத்தினைக் கொண்டுள்ளார்.
   - அமைச்சர்களை மாற்றுதல், புதிய அமைச்சர்களை நியமித்தல் மற்றும் அமைச்சுக்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் போன்ற அதிகாரங்களை கொண்டுள்ளார்.

**குறிப்பு :** பரீட்சாத்திகள் மேற்கூறிய விடயங்களுக்கு அப்பால் சென்று சில விடயங்களை குறிப்பிட்டிருக்கலாம். அவை பொருத்தமான விடயங்களாக இருக்குமாயின் புள்ளிகளை வழங்கவும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏதேனும் ஐந்து விடயங்களை எழுதியிருந்தால் முழுமையான புள்ளிகளை வழங்கவும்.